இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2024. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 05 | திகதி : 28.04.2024 | விலை : 50.00

முடி சூடிய நூற்றாண்டில் - உம்
மடி தேடி வரவேண்டிய - எம்மை
அடி தேடி வந்து ஆசீர்கள்
கோடி ஈந்த மருதமடுத் தாயே
விழி நீரில் உம் விம்பம் சுமந்து
வழி அனுப்பிய எம் உள்ளங்கள்
இல்லங்கள் இறையருளால் நிறைந்திட
எமக்காகத் தொடர்ந்தும்
இறைவனிடம் பரிந்துரையும் அம்மா





பணிக்குருத்துவத்தில்
பொன் விழாக் காணும்
எம் ஆயரை வாழ்த்தி
மகிழ்கின்றோம்

## ஞாலப் பெருவெளியில் ஞானப்பிரகாசமாக...

கீழ்த்திசை வானில் கதிரவனின் பொன்னொளி
யாழ் திருஅவை வானில் ஆயர் உம் பொன்னொளி
அன்று திருவருள் கூடியதால் பேரருள் திருவானீர்
இன்று குருத்துவப் பொன்விழாக் காண திருப்பேருருவானீர்

ஆன்மீகப் பணிதனில் உம்மை ஒளிச்சுடர் என்போம்
ஆயத்துவ மேய்ப்பில் உம்மை வற்றாதநதி என்போம்
ஆன்ற பேரருளில் உம்மை அலைகடல் என்போம்
ஆளுமைப் பண்பதில் உம்மை மாமலை என்போம்

தொட்டதெல்லாம் பொன்னாக ஒளிர்கிறதே
நட்டதெல்லாம் நலமாக மிளிர்கிறதே
பட்டதெல்லாம் பயிராக படர்கிறதே
இட்டதெல்லாம் இதமாகத் தொடர்கிறதே

பார்மேல் நடந்தாற் போல் நீர் மேல் நடந்த
பரமனின் பாதத்தின் சுவடுகளைப் பின்தொடர்ந்து
பணிவிடை பெறாத பணிவிடை புரிந்தீர்
பணிக்குருத்துவ வாழ்வின் பொன்விழாக் கண்டீர்

மறைக் கல்விப் புலத்தின் மகோன்னத வளர்ச்சி
மறைவளர்த்து மாண்புயர்த்தும் உம் தீவிர முயற்சி
மறையாசிரியர் மனமுவந்து பெறும் மறை பயிற்சி
மறைகாக்கும் பண் கண்டு மனம் காணும் குளிர்ச்சி

கல்வித் தாகத்தில் ஆயர் உம் மூச்சு
கண்ட பல கனவுகள் நனவாகும் வீச்சு
மறைபணி உயிராக கல்விப்பணி கண்தருமே
மனித நேயத்தின் மகத்துவம் விண்மிகுமே

வடபுலத்தின் புகழ்பூத்த கல்லூரிகளாய்த் தாய் திகழும்
புனித பத்திரிசியார் கல்லூரி ஹென்றியரசர் கல்லூரி
அதிபராக வீற்றிருந்து ஆற்றிய பணி பார்த்து
அகிலமே வியந்து நின்று போற்றியது நாமறிவோம்

கட்டாயக் கல்வியுடன் சர்வதேசக் கல்வியும்
வருங்கால சந்ததி வளப்புறவே பெற்றிடவே
மொன்போட் சர்வதேச கல்வி நிறுவகத்தை
வான்தொட எழுப்பினீர் அறிவுலகு நிமிர்ந்ததுவே

இலங்கையின் கல்விக் கொள்கை இலக்கின்றி பயணிப்பதால்
இருள்சூழ் அபாயம் இருப்பதனைக் கண்ணுற்று
மூன்றாம் நிலைக் கல்விக்கு அத்திவாரம் இட்டீர்
மீண்டெழுந்தது காண் பல தொழிற் கல்விக்கூடங்கள்

இறையியல் கல்வியை இறைமக்களும் சுவைத்திட
இறையியல் கல்லூரியை இலாவகமாய் எழுப்பினீர்
உளவியல் கல்வியால் உள்ளங்களை உருப்படுத்த
அகவொளி நிறுவகத்தின் சேவைக்கு உருக்கொடுத்தீர்

ஊடக தர்மம் உருக்குலைந்த வேளைதனில்
ஊடகமையமென மறைநதியை மனிங்கண்டீர்
மறை அலை தொலைக்காட்சி வீசுதே வண்ண அலை
மறைமாவட்ட நிகழ்வுகள் சிறக்குதே எண்ண அலை

ஆன்மீகவாதிகள், அரசியல்வாதிகள் தலைவர்கள் பிரமுகர்கள்
ஆயர் இல்லம் நாடி வந்து உம்முன் பணிந்து நின்று
ஆலோசனை பெற்று அரும்பணி புரிவது
ஆன்ற பேரருள் ஆண்டகை நீர் என்பதற்கு சான்று அன்றோ

வல்லவர்கள் வேண்டாம் நல்லவர்கள் வேண்டுமென
வலம்வந்து கற்பகப் பணிபுரியும் ஆண்டகையே
வாழ்த்தி அருள் வேண்டுகின்றோம் மரியன்னை வழி இறைவனிடம்
வானுயர ஒளிர்வீர் அதோ! ஞானப்பிரகாசமாய்...

*கவியாக்கம்: ஆசிரியர் இ. வசீகரன்*

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## மடு அன்னையின் பிரியாவிடையும் வணக்கமாதத்தின் ஆரம்பமும்

"இறைவனின் தாய் எம்மிடம் வர வாய்ப்புப் பெற்றது எப்படி" என்ற இறைவார்த்தை எம் மனங்களில் நன்றியின் உணர்வாக இருக்க, யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தைத் தரிசித்து தம் நிறையாசீரை வழங்கிச் செல்கின்றார் எம் மருதமடு அன்னை. நாம் தனிப்பட்ட முறையிலும், குடும்பமாகவும், பங்குத் திருஅவையாகவும் ஆன்மீக ஆயத்தங்களுடன் மருதமடு அன்னையை வரவேற்று ஆசீர்பெற்று விழிநீர் சொட்ட வழி அனுப்பியுள்ளோம்.

மருதமடு அன்னை நாம் தொடர்ந்து அவருடன் இணைந்து வாழ வணக்க மாதத்தைத் தருகின்றார்.

மே மாதம் எமது அன்னையாம் மரியாளின் வணக்க மாதம். பெரும் பெரும் இன்னல்களுக்கும், ஏக்கங்களுக்கும், அங்கலாய்ப்புகளுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் நாம் இம் மாதத்தைப் பக்தியின் மாதமாக்கி, தேவதாயிடம் எம் குடும்பங்களைக் கையளித்து, எமக்காகவும் உலக அமைதிக்காகவும் இறைவனிடம் பரிந்துரை செய்யுமாறு, பக்தியோடு திருச் செபமாலை சொல்லி மன்றாடுவோம்.

எமது அன்னையாகிய மரியாள் இறைவனின் தாய். இரக்கத்தின் தாய். எம் எல்லோருக்கும் தாய். அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் எங்கு தேவை இருக்கின்றதோ அங்கு சென்று தேவைகளை நிறைவேற்றி வந்தார். கானாவூர் திருமணத்தில் கனிரசம் தீர்ந்தபோது தம் மகனிடம் பரிந்துரைத்து, முன்னர் பரிமாறியதை விட மேலும் இனிமை மிக்க கனிரசத்தை அருளச் செய்தார். எலிசபெத்தம்மாளிடம் சென்று அவளின் பேறுகாலத்தில் அவளுக்கு ஒத்தாசை புரிந்தார்.

கிறிஸ்து இயேசுவின் சிலுவைப் பயணத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டு, சிலுவை அடியில் மிகுந்த வியாகுலத்துடன் தன் மகனுக்கு ஆறுதல் அளித்தார். இத்தகைய அன்னை எம்மைக் கைவிடுவாளா? இல்லை. எமக்காகப் பரிந்துரைப்பார். எப்போது என்றால், நாம் திருச்செபமாலை சொல்லி மன்றாடும்போது நிச்சயம் அவர் எமக்காக இறைமகன் இயேசுவிடம் பரிந்துரைக்கத் தயங்க மாட்டார். ஆனால் நாம் இதுவரை அவரிடம் பக்தியோடு மன்றாடவில்லை என்ற கசப்பான உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இன்று எம் மத்தியில் செபமாலை சொல்லும் வழக்கம் அறவே அற்றுப் போய்விட்டது. செபமாலை சொல்லும் நேரத்தை தொலைக்காட்சி நாடகங்களும், ஸ்மாட் போன்களும் பெற்று விட்டன. செபமாலை அணிவதும், அதனை எம்முடன் வைத்திருப்பதும், பயணப் பொதிகளில் அதனைக் கொண்டு செல்வதும் முழுமையான செபமாலைப் பக்தியாகாது. எமது நேரத்தை ஒதுக்கி, பக்தியோடு குடும்பமாக, பங்கு மக்களாகச் செபமாலை சொல்வதுதான் அன்னையின் மீது நாம் கொண்டுள்ள உண்மையான பக்தியாகும்.

மரியாளின் மன்றாட்டு மாலையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புதிதாக மூன்று வாழ்த்தொலிகளைச் சேர்த்துள்ளார். "மரியாள் இரக்கத்தின் அன்னை, மரியாள் நம்பிக்கையின் அன்னை, மரியாள் புலம்பெயர்ந்தோரின் ஆறுதல்" என்பவையே அவையாகும். இன்றைய சூழலில் இவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. இரக்கத்தின் அன்னையாகிய மரியாள் எம்மீது இரக்கம் காட்டுவார். அவர் நம்பிக்கையின் அன்னையாக இருப்பதால் நம்பிக்கையோடு நாம் அவரை அணுகலாம். "மாதாவே சரணம், உந்தன் பாதாரம் புவிக்காதாரம்" என நம்பிக்கையோடு அவரிடம் சரணடைவோம். நாம் இன்று உடலளவில் புலம்பெயரா விட்டாலும் உள்ளத்தளவில் எமது மனங்கள் உலகப் போக்குகளில் புலம்பெயர்ந்திருக்கிறது. இந்நிலையில் அன்று எலிசபெத்தம்மாளுக்கு ஆறுதல் அளிக்கச் சென்ற எம் அன்னையாகிய மரியாள் எமக்கு ஆறுதலாக எம்மோடு துணையிருப்பாள்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கத்தோலிக்க மக்களிடம் ஓர் அழைப்பை விடுத்திருக்கின்றார். உலகில் நடைபெற்று வரும் போர்கள் ஓய்வு கண்டு, ஒற்றுமையுடனும் அமைதியுடனும் கூடிய நல்லுறவு நாடுகளுக்கி டையே ஏற்பட வேண்டும் எனவும், பொருளாதார நெருக்கடிகளில் வாழும் நாடுகள் அபிவிருத்தி அடையவும் அன்னை வழியாக இறைவனிடம் வேண்டுங்கள் என்பதே அவ்அழைப்பாகும்.

இவ் அழைப்பை அசட்டை செய்யாமல் கருத்துடன் ஏற்று, ஐம்பத்துமூன்று மணிகளைக்கையிலேந்தி, நோவாவின் பேழையாக மிதக்கப் போகிறோமா? பாபேல் கோபுரமாக சரியப் போகின்றோமா? வணக்க மாதத்தில் நாம் சொல்லும் செபமாலை அலகையின் தலையை நசுக்கட்டும்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# துயர் பகிர்கின்றோம்

எமது யாழ். புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் கடந்த 35 ஆண்டுகளாக முதன்மைப் பணியாளராகப் (Forman) பணியாற்றி வந்த திருவாளர் ஜோசப் பாலேந்திரன் அவர்கள் கடந்த 21.04.2024 அன்று திடீர் சுகயீனம் காரணமாகக் காலமாகிவிட்டார்.

நீண்டகாலம் அர்ப்பணிப்புடன் அவர் ஆற்றிய சேவைகளுக்காக எமது இதயத்து நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடி நிற்கின்றோம்.

இவரின் இழப்பினால் துயருற்றுள்ள அவரது அன்பு மனைவி, மகள் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

# குருத்துவப்பணி கடவுளின் உதவியுடன் சமூகத்தைக் கட்டியெழுப்பும் பணி

### திருத்தந்தை பிரான்சிஸ்

வெற்றிடமாக மாறிவரும் இடங்களில், நம் சகோதரர் சகோதரிகளிடையே கடவுளை எடுத்துச்சென்று அங்கு சமூகத்தையும், திருஅவையையும் கட்டியெழுப்பும் பணியை இயேசுவிடமிருந்து நாம் பெற்றுள்ளோம் என இஸ்பெயினின் உயர்மறைமாவட்டக் குருமடமாணவர்களை ஏப்ரல் 27ஆம் திகதி திருப்பீடத்தில் சந்தித்தபோது எடுத்துரைத்தார்.

குருத்துவப்பணியை ஏற்று நடத்த இயேசு விடுத்த அழைப்பில் இங்கு பல்வேறு இனங்கள், கலாசாரங்கள், வயதினர் பதிலளித்துள்ளதைக் காணமுடிகின்றது என அக்குருமட மாணவர் குழுவிடம் கூறிய திருத்தந்தை, வரலாற்றிலும் பாரம்பரியத்திலும் புகழ்வாய்ந்ததாக இருப்பினும் வெற்றிடமாகத் தோன்றும் இடங்களில் நற்செய்தி அறிவிக்க முன்வந்துள்ளது பெருமையாக இருக்கிறது என மேலும் எடுத்துரைத்தார்.

வெற்றிடமாக மாறியுள்ள இவ்வுலகில் கடவுளைக் கொண்டு நாம் நிரப்பவேண்டும் என்று ஆய்ந்து தெளிவதன் வழியாக நாம் நம் சமூகங்களிடையே இறைவனைக் கொண்டு வருவதுடன், நல்லதொரு சமூகத்தையும் தலத் திருஅவையையும் கட்டியெழுப்ப முடியும் என மேலும், அருட்பணியாளருக்குரிய பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் அம்மாணவர்களிடம் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பன்முகத்தன்மை கொண்ட குழுவாக நாம் ஒருவரை ஒருவர் வரவேற்கவும், ஒருவரை ஒருவர் வளப்படுத்தவும் தெரியும் அதேவேளையில், இறைவனுக்கும் அடுத்திருப்பவருக்குமான பிறரன்பில் ஒன்றிணைந்து இருவர் இருவராக நடக்கும்போதுதான் நம்மால் கடவுளை எடுத்துச் செல்ல முடியும் என அவர்களிடம் திருத்தந்தை கூறினார்.

அறுவடைக்குத் தேவையான ஆட்களை அனுப்பும்படி இறைவனிடம் வேண்டுவது, நம் உள்மனதில் இருக்கும் வெற்றிடத்தை நிறைவு செய்ய இறைவனையும் நமக்கு அடுத்திருப்பவரையும் அங்கு வரவேற்பது என்பவைகளையும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம்முள் நிறையும் கடவுள் தரும் அமைதியை உலகெங்கும் எடுத்துச் செல்வோம் என்ற விண்ணப்பத்தையும் இஸ்பெயினின் உயர்மறை மாவட்டக் குருமடமாணவர்களிடம் முன்வைத்தார்.

# முடிவற்ற போரை விடப் பேச்சுவார்த்தை கொண்ட அமைதியே சிறந்தது - திருத்தந்தை பிரான்சிஸ்

பேச்சுவார்த்தைகளை நாடுங்கள், அமைதியைத் தேடுங்கள் என்றும் முடிவற்ற போரை விட பேச்சுவார்த்தை கொண்ட அமைதி சிறந்தது என்றும் அமெரிக்க ஒளிபரப்பு நிறுவனத்திற்கு அளித்த நேர்காணலில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உக்ரைன், காசா மற்றும் உலகின் பல பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரை நிறுத்துமாறு இந்த நேர்காணலில் அழைப்புவிடுத்துள்ள திருத்தந்தை அவர்கள், திருஅவையில் அனைவருக்கும் இடமுள்ளது. ஒருவர் உங்களை ஏற்கவில்லை என்பதற்காகத் திருஅவையை விட்டு விலகாதீர்கள் திருஅவை மிகப்பெரியது என்றும் கூறியுள்ளார்.

ஏறக்குறைய ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த நேர்காணலில் திருத்தந்தை அவர்கள், காசாப் பகுதியில் வாழும் மக்களின் நிலையை, அங்கு பணியாற்றும் கத்தோலிக்க அருள்பணியாளருடன் தான் தினமும் தொலைபேசியில் உரையாடி அறிந்து கொள்வதாகவும், நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது, உணவிற்காக மக்கள் போராடுகின்றார்கள் என்று அவர் கூறுவதாகவும் எடுத்துரைத்துள்ளார்.

உக்ரைன் மீதான இரஷ்ய படையெடுப்பால் குழந்தைகள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர் அக்குழந்தைகள் எவ்வாறு புன்னகைப்பது என்பதை மறந்துவிட்டார்கள் என்று கூறியுள்ள திருத்தந்தை அவர்கள், ஒரு குழந்தை புன்னகைப்பதை மறப்பது என்பதுமிகவும்கொடுமையானதுஎன்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் காலநிலை மாற்றம், திருஅவையில் சிறப்பிக்கப்பட இருக்கும் உலக குழந்தைகள் நாள் பற்றி எடுத்துரைத்துள்ள திருத்தந்தை அவர்கள், குழந்தைகள் எப்போதும் உலகிற்கு ஒரு செய்தியைக் கொண்டு வருகின்றார்கள், இளமையான இதயத்தைப் பெற வழிவகுக்கின்றார்கள் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

தனது உடல்நிலை பற்றிக் கேட்கப்பட்ட கேள்விக்கு தான் நன்றாக இருப்பதாகக் கூறியுள்ள திருத்தந்தை அவர்கள், திருஅவையை விட்டு யாரும் விலகிச் செல்லக்கூடாது என்றும், தலத்திரு அவையில் ஒருவர் நம்மை வரவேற்கவில்லை என்றால், நமக்கான ஓர் இடம் வேறு எங்காவது இருக்கும் ஏனெனில் திருஅவை மிகப்பெரியது என்றும் கூறியுள்ளார்.

# உள்ளத்தை மகிழ்ச்சியால் நிரப்பும் அமைதி

### திருத்தந்தை பிரான்சிஸ்

அமைதி என்பது நாம் மன்னிக்க நினைக்கும் போது உருவாகின்றது, இது கடினமாக இருந்தாலும், நமது உள்ளத்தை மகிழ்ச்சியால் நிரப்புகின்றது என்றும், தாத்தா, பாட்டி மற்றும் வயதில் மூத்தவர்களுடன் உரையாடுவதன் வழியாக எதிர்காலத்திற்கான அடிப்படை வேர்களை நம்மால் கண்டறிய முடிகின்றது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வத்திக்கான் தூய ஆறாம் பவுல் அரங்கத்தில் ஹங்கேரிய நாட்டுத் திருப்பயணிகள் ஏறக்குறைய 1200 பேரைச் சந்தித்த போது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஹங்கேரியைச் சார்ந்த புனிதர்கள் மற்றும் அருளாளர்களின் வாழ்க்கையைச் சுட்டிக்காட்டி அதன்படி வாழ வலியுறுத்தினார்.

பாஸ்காக் காலத்தில் இருக்கும் நம்மை, உயிர்த்தெழுந்த இறைவன் ஒளிரச்செய்து, ஏமாற்றமடையாத நம்பிக்கையைத் தருகிறார் என்று கூறிய திருத்தந்தை அவர்கள், பாலங் கள் மற்றும் புனிதர்களைக் கொண்ட அழகிய நகரமான புடாபெஸ்டில் தான் திருப்பயணியாக இருந்து அம்மக்களுடன் சேர்ந்து செபித்ததையும் நினைவுகூர்ந்தார். இளைய தலைமுறையின ருக்கு நம்பிக்கையின் எதிர்காலத்தை வழங்க வேண்டும், போரை அல்ல. மகிழ்வின் தொட்டில்களை வழங்க வேண்டும் கல்லறைகளை அல்ல, சகோதரத்துவத்தை வழங்க வேண்டும் சுவர்களை அல்ல. ஐரோப்பாவிற்காக செபிக்க வேண்டும், அமைதியைக் கட்டியெழுப்ப வேண்டும், என்ற நோக்கத்தில் ஹங்கேரிக்குத் தான் மேற்கொண்ட திருத்தூதுப் பயணத்தையும் நினைவுகூர்ந்தார் திருத்தந்தை. பல்லாயிரம் ஆண்டுகளாக ஹங்கேரிப் பகுதியில் வாழ்ந்து கிறிஸ்துவின் நற்செய்தியை உரமாக்கிய புனிதர்கள் மற்றும் அருளாளர்களின் முன்மாதிரிகையான வாழ்க்கையை தற்போதுள்ள வரலாற்றுச் சூழலில் எப்போதும் பின்பற்றுவதற்கான வலிமையையும், உறுதியையும் செபத்தில் நாம் கண்டறியலாம் என்றும் கூறினார் திருத்தந்தை.

உயிர்த்த இயேசு தனது சீடர்களுக்கு அமைதியைக் கொடையாகக் கொடுத்தார். இந்த அமைதியானது நம் ஒவ்வொருவரின் இதயத்திலிருந்து தொடங்குகின்றது என்றும், நமது வீட்டிலிருந்து நாம் புறப்படும்போது ஒவ்வொருவரும் நான் அதிகியுள்ள மனிதனாக என்னோடும் பிறரோடும் இந்த நாளை வாழ விரும்புகின்றேனா என்பதிலிருந்து ஆரம்பமாகின்றது என்று கூறினார்.

# யாழ். ஆயரின் குருத்துவப் பொன்விழா மலரில் வெளியான வாழ்த்துச் செய்திகள்

## வட மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து



### *முப்பணிகளால் முழுமையானவர்*

யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் இறைவனின் தோட்டத்தில் மிகுந்த கனி கொடுக்கின்ற திராட்சைக் கொடி போன்றவர். 2024 ஆம் ஆண்டு அவர் வாழ்வில் பல யூபிலி ஆண்டு களை நிறைவு செய்து திரு அக வையின் யூபிலி ஆண்டை எதிர்கொள்கிறார். அந்த வகையில் அவரது அகவையின் 75 ஆண்டுகளையும் குருத்துவ திருநிலைப்படுத்தலில் 50 ஆண்டுகளையும் பூர்த்திசெய்து ஆயர் நியமனத்தின் 10 ஆவது ஆண்டை தொட்டு நிற்கின்றார். இத்தகைய உன்னதமான வேளை யில் நான் அவரை வாழ்த்தி மகிழ்கின்றேன்.

ஆயர் அவர்களின் கடந்தகாலப் பணி வாழ்வை மீட்டு நோக்குகின்ற போது இறைவன் அவருக்கு வழங் கிய ஆற்றல்கள் அருள் வளங்கள் உள நலன்கள் அனைத்தையும் இணைத்து உத்தமமான வகையில் யாழ் மறைமாவட்டத்தில் உன்னத இறை பணியாளராகத் திகழ்ந் திருக்கிறார் என்பதை நினைந்து உவகை அடைகிறேன்.

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ் தவர்களுக்கும் வழங்கப்படும் இறைவனின் முப்பணி களில் எமது ஆயர் அவர்கள் அரச,குருத்துவ, இறைவாக் குப் பணி எனும் மூன்றையும் முழுமையாகப் பெற்று கிறிஸ்துவின் சிறந்த பணியாளனாகத் திகழ்கின்றார்.

இறைவனின் குருவாக அழைப்புப் பெற்று பணிக்குருத்துவத்தில் இறை ஆசியோடு கற்றல் கேள்வி ஞானத்தினால் பங்குகளை வழிநடத்தியவர். 1974 ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் யாழ்.மறை மாவட்டத்தில் பல்வேறு பங்குகளில் பணி யாற்றி யதால் இறை மக்களின் தேடல்கள், தேவைகள் என்ன என்பதை நன்குணர்ந்து சிறந்த குருவாகத் துடிப்போடு செயற்பட்டவர் என்பது யாவரும் அறிந்தது.

1976 ஆம் ஆண்டு ஆசிரியராகக் கற்பித்தல் பணியில் கால் பதித்து ஓடிக்கொண்டிருக்கும் நதி போன்று மாணவர்களுக்குப் புத்துணர்வான, உயிரூட்டம் உள்ள கல்வியை வழங்கியவர். வகுப்பறைக் கற்றல் கற்பித் தல்களிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் மாண வர்களை வளர்த்தெடுக்கும் அவர் எப்பொழுதும் கற்றுக் கொண்டே இருப்பவர் என்பது சிறப்பு. அவருடைய தலை மைத்துவத்தில் யாழ்.இளவாலை புனித ஹென்றி அரசர் கல் லூரி, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி என தேசியம் வரை சிறந்து விளங்கியது.

ஆயர் அவர்கள் 31 ஆண்டுகள் கல்விப் பணியில் இரண்டாம் நிலைக் கல்வி கடந்து மூன்றாம் நிலைக் கல்வியி லும் கால் பதித்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ நாகரிகத் துறையில் விரிவுரையாளராகவும்,மாண வர் ஒழுக்காற்று சபையின் தலைவராகவும் முதுகலைப் பட்டம் மற்றும் கலாநிதிப்பட்ட மதிப்பீட்டாளராகவும் பணியாற்றினர்.

குருத்துவத்தின் நிறைவு ஆயத்துவம் ஆகும். அழைக் கப்பட்ட குருக்கள் மத்தியிலிருந்து சிறப்பான தெரிவை இறைவன் இவருக்கு வழங்கினார். மாணவர்களை வழிநடத் தும் ஆளுமை கொண்ட ஆசிரியர், இறை வழிபாட்டை நிறை வேற்றும் குரு மறை மாவட்டத்தை வழிநடத்தும் ஆயராக உயர்த்தப்பட்டார். கல்வியில் உயர்ந்த இலக்குகளைக் கொண் டிருந்தவராகப் பல சர்வதேசப் பாடசாலைகளை எம் மறை மாவட்டத்தில் உருவாக்குவதற்கு பெரும் சக்தியாக அமைந் தவர் எம் ஆயர் என்றும் இறையருளும் உடல் நலமும் ஆன்மீக வளமும் நிறைவாய் பெற்று வாழ வாழ்த்தி நிற்கின் றேன்.

***தி.ஜோண் குயின்ரஸ்***
*மாகாணக் கல்விப் பணிப்பாளர்*
*மாகாணக் கல்வித் திணைக்களம்*
வடமாகாணம்

## கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயரின் வாழ்த்துச் செய்தி



"ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்து கின்றது. என் மீட்பராம் கட வுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது."

தமது குருத்துவ வாழ்வின் பொன் விழாவைக் கொண்டாடும் யாழ் மறை மாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண் டகையை வாழ்த்தி, பாராட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஐம்பது ஆண்டுகள் என்பது ஒரு நீண்ட காலப் பகுதி அரை நூற்றாண்டு, அதுவும் குரு வாக, துறவியாக வாழ்வது என்பது இறை அன்பை சுவைக் கும் ஓர் உன்னதமான காலமாகவும் அதனூ டாக ஆயர் அவர்கள் தாம் பெற்றுக் கொண்ட அனைத்து இறை வரப்பிரசாதங்களுக்கும் நன்றி நிறைந்த மனதுடன் இறைவனின் திருமுன் தாள்பணிந்து வணங்கி நிற்கும் சிறந்த காலமாகவும் திகழ்கின்றது.

திருஅவையில் கடந்த 50 ஆண்டுகளாக முதலில் இறை வழிகாட்டலில் குருவாகவும் பின்னர் ஓர் ஆயராகவும் மறைப்பணிக்கும் கல்வித்துறைக் கும் சமூகத்திற்குமாக அவர் ஆற்றிவரும் நிகரற்ற பணி வாழ்விற்காக இறைவனுக்கு நன்றி கூறுகி ன்ற அதேவேளையில் அவர் இனிவரும் காலங்க ளில் இறைப்பணியை இறைவனது திருவுளத்திற்கு ஏற்றவாறு மென்மேலும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல இறைவன் தமது அருட்கொடைகளை யாழ் ஆயருக்கு வழங்குமாறு வேண்டி நிற்கின்றேன்.

இறையாசீர் நிறைந்த யூபிலி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

**பேரருட்திரு. பி. அன்ரன் ரஞ்சித்**
துணை ஆயர்
கொழும்பு உயர் மறைமாவட்டம்

## நல்லை ஆதீன முதல்வரின் வாழ்த்து



அன்புள்ளவர்களுக்கு,

யாழ்ப்பாண ஆயருடைய குருத்துவப்பணியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு அடைந்திருப் பதை இட்டு மகிழ்ச்சியடைகின்றோம். மனித நேய அடிப்படையில் வாழ்ந்து கொண்டிருக்கும் போராட்டத்தில் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களை வாழ்த்துவதில் நாமும் மகிழ்வடைகின்றோம்.

ஐம்பது ஆண்டுகள் குருத்துவப்பணியை நிறைவாக ஆற்றி அனைவருடைய உள்ளத் தினையும் தன்வசமாக்கிய ஆயராக, எல்லா மதங்களுடைய நன்மதிப்பைக்கொண்டு அந் தந்த மதங்களுக்கு ஏற்ற வகையில் தன்னையும் நெறிப்படுத்தி வாழ்ந்து கொண்டிருக்கும் ஆயர் அவர்கள் இன்புற்று வாழ்ந்திருக்க வாழ்த்துகின்றோம். இப்பணி தொடர இறையருளை வேண்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

## மௌலவி ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களின் வாழ்த்துரை



### அருட்பெயரும் அன்பின் பெயரும் சூழ் ஆயரை வாழ்த்தும் வாழ்த்துரை

காலத்தின் ஓட்டத்தில் கலந்துறவாடி கலாசார ஆன்மீக நிலைப்பாட்டினை நிலை நிறுத்தி செம்மைப்படுத்திய பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண் டகை அவர்களின் குருத்துவப்பணியின் சீர்மையும் சிறப்பும் ஐம்பது ஆண்டுகளைத் தொட்டுத்துலவி அவ னியில் பவனி வருகிறது என்பதை எடுத்தோதும் போது அகமும் முகமும் குளிர்கிறது என்பது தான் உண்மையிலும் உண்மை.

'தோன்றின் புகழொடு தோன்றுக" என்பதற் கோர் உதாரணம் இவராவார்.

இவரது பெயரினை உச்சரிக்கும் போது கனத்த இதயங்களிலும் கனிவு ஏற்பட்டு விடும். மேலும் கலங் கரை தீபமாக மனிதநேய வாழ்வுக்கு வழிகாட்டும் திரு மறை போற்றும் ஆன்மீகத் தொண்டு ஆறிலி ருந்து அறுபது வரையுள்ள மானிடரையும் நேர்வழி யில் வாழவைக்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

இவரிடம் ஒட்டிப்பிறந்துள்ள அன்பும் பண்பும் இரட்டைக் குழந்தைகளாக மலர்ந்து மணம் வீசுவ தின் மாண்பே 50 ஆண்டு நிறைவின் பிரசவிப்புக் கள். எனவே பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை வாழ்த்திப் போற்று வதில் நான் பெருமைப்படுகின்றேன்.

"இதயத்தின் துடிப்பெல்லாம் இயங்கிடும் உலகிற்கு" என்றே தன் குருத்துவப்பணியை குறிக் கோளாக்கி இத்தனை காலமும் சிறப்பித்த பணியின் பயனும் பலனும் அளப்பரியது. ஆதலால் அவர் இன்னும் இன்னும் பல பதவிகளைப் பெற்று பல்லாண்டு காலம் நிலைத்த ஆரோக்கியத்துடனும், நீடிந்த ஆயுளுடனும் அவருடன் துணையிருக்கும் இறைவனின் பராமரிப் புடனும் அன்புடனும் வாழ வாழ்த்துகிறேன்!

என்றென்றும் நலத்துடனும் வளத்துடன் வாழ
தூயோனாம் வல்ல இறைவனைப்
பிரார்த்தித்து துதி செய்கிறேன்.

***தேசாபிமானி. அல்ஹாஜ்***
***மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ் (காஸ்மி)***
*யாழ்./கிளி மாவட்ட உலமா சபை*
*முன்னாள் தலைவர்*

## மாவை. சோ.சேனாதிராசா அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் பேரருட் திரு. ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் குருவா கப் பணியாற்றி ஐம்பது ஆண்டுகள் 2024 சித்திரைத் திங்கள் 24ஆம் நாளில் நிறைவு பெறுகின்றது. அந் நி கழ்ச்சியைப் பாராட்டி யாழ் மறை மாவட்டக் குருகுலம் விழா எடுத்து மலர் வெளியிட்டுக் கொண்டாடவுள்ளமை பெரு மகிழ்ச்சியளிக்கிறது.

ஆயரின் குடும்பம், ஊர் மக்கள், அவர் பிறந்த ஊர் காங்கேசன்துறைப் பகுதி பண்டத்தரிப்பில் பற்றிமா அன்னையின் திருத்தலத்தில் திருப்பலி நிறைவேற்றிச் சிறப்பிக்க வைத்த வரம் பெற்றவர்.

அப்பகுதியில் புனித ஹென்றி அரசர் கல்லூ ரியில் வெளியிடப்பட்ட யூபிலி மலரில் அவரின் தாயார் அளித்த பேட்டியொன்றில் "ஈன்ற பொழுதிலும் பெரி துவக்கும் தன்மகனைச் சான்றோரன் எனக் கேட்ட தாய்" என்று கூறியதைப் பார்த்து மகிழ்ந்தோம்.

ஆயர் பிறந்தநாள் 1948 வைகாசி 13. அவர் பிறந்தநாளில் அவர் பிறந்த ஊரில் பண்டத்தரிப்பில் ஆண்டுதோறும் நிகழ்ச்சிகள் நடைபெறும். அந்த ஊர் நிகழ்ச்சிகளில் ஆயருடன் நானும் சில சந்தர்ப்பங்க ளில் கலந்து கொண்டிருக்கிறேன். தமிழர் தலைவர் தந்தை செல்வ நாயகத்துடன் பல முறை அந்த ஊர் மக்கள் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருக்கிறேன். ஆயர் இல்லத்தில் அவர் கருத்து, ஆலோசனை பெறுவ தற்குப் பலதடவைகள் ஒன்றுகூடியிருக்கின்றோம். இச் சம்பவங்களை நாம் நினைவுகூருவோம்.

ஆயர் கல்வியில் கலாநிதிப் பட்டம் பெற்றவர், அறிவு ஆற்றல் பெற்றவர். யாழ் பல்கலைக் கழகப் பேர வையில் பணிபுரிந்தவர். தமிழின விடுதலைப் போ ராட்டங்களால், கலவரங்களால் பாதிக்கப் பட்ட மக்கள் மத்தியில் தன் உயிரைப் பணயம் வைத்து ஆயர் தன்னை அர்ப்பணித்து உயிர்களைக் காப்பாற்றியவர். ஏழை மக்கள் மத்தியில் போர்க் காலங்களில் மக்களின் காவலனாக, பஞ்சம் பசியால் வாடிய மக்கள் மத்தியில் அவர்கள் துயர் போக் கத் தன்னை அர்ப்பணித்துழைத்து மக்களைக் காத்து நின்றவர். தமிழ் மக் கள் வாழ்விடங்கள் இராணுவ ஆக்கிர மிப்பிலிருந்து விடுபட அயராது போராடி னார் எனக் கூறுவோம். ஆயர் தன் ஆன்மாவிலிருந்து அன்பு, அறிவு, அர்ப் பணிப்பு, இரக்கம், ஈவு கொண்ட பண்பாளனாய் மக்களை வாழவைப்பதில் அர்ப்பணித்து வாழ்ந்தவர்.

ஜஸ்ரின் ஆண்டகை அவர்கள் யாழ்ப்பாணத் தில் தலைசிறந்த பாடசாலைகளில் ஒன்றான இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் அதிபராகவும், பின்னர் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் அதிபராக விளங்கிய காலம் கல்விக்கு அவராற்றிய உயர் அர்ப்பணம் மிகப் பெருமை வாய்ந்ததாகும். குரு முதல்வர் தன் பள்ளிக் கூடக் காலத்தில் உதைபந்தாட்டம் முதலான விளையாட்டுத் துறையிலும் முன்னிலை வகித்திருந்தார்.

அதே போல மனித குலத்தின் விடிவுக்காக, தமிழ் மக்களின், தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக தன் ஆன்மாவிலிருந்து அர்ப்பணிப்புடன் தமிழ் மக்கள் பே ராட்டங்களுடன் இணைந்தும் ஆதரித்தும் வாழ்ந்து வந்தவர் என்று கூறுவோம். தமிழ் மக்கள் வரலாற்றில் ஆன்மீக வாழ்வில்

தங்கள் குருத்துவ காலத்தில் 41 அகவை நிறைவு செய்து 11ஆவது ஆயராக திருநிலைப்பட்ட பொழுது மக்கள் ஆன்மாவிலிருந்து மகிழ்ச்சி பொங்கியது.

ஆயர் பொறுப்பிலிருக்கும் வேளையில் யாழ் மறை மாவட்டத்தில் தாங்கள் குருவாக விளங்கி 50 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற வேளை நாம் எல்லோரும் இதயபூர்வ மாக வாழ்த்துக்களை அர்ப்பணித்து நிற்கின்றோம்.

**மாவை. சோ. சேனாதிராசா**
தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி



# இளையோர் ஆணைக்குழு இயக்குநரின் நயப்பு

யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றிய செயற்பாடுகாளுக்கு எமது ஆயர்கள், இயக்குனர்களின் பங்களிப்பு பெருமைக்குரியது.

அந்த வகையில் எமது ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தாம் ஆயராக பொறுப்பேற்றவுடனேயே இளைஞர்கள் உருவாக்கத்திலே கூடிய கவனம் செலுத்தினார். குறிப்பாக "இளையோர் ஆண்டை" பிரகடனம் செய்து ஆண்டு முழுவதும் இளைஞன் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி இளைஞர் உருவாக்கம் பெற வேண்டுமென்று விரும்பினார்.

அத்தோடு இளைஞர்கள் ஆணைக்குழுவிற்கான சிறந்தலும் பயனுள்ளதுமான ஒரு யாப்பை நிறுவி அதை எமது மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளும் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் நியதியையும் உருவாக்கினார்.

எப்போதும் இளைஞர் பணியிலே மிகுந்த அக்கறை கொண்டு இளையோர் வளர்ச்சியிலே அதிக அக்கறை கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். குறிப்பாக 'தேசிய இளையோர் நாட்கள்' யாழ் மறை



மாவட்டத்திலே முன்னெடுக்கப்பட்ட பொழுது தனது முழுவதுமான பங்களிப்பை செய்ததை மறுக்க முடியாது.

'தேசிய இளைஞர் ஒன்றுகூடல் 2023ம் ஆண்டு வைகாசி மாதம் 5, 6, 7ம் திகதிகளில் மிகவும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. எமது ஆயர் அவர்களின் முழு ஒத்துழைப்புடன் அப்போதைய இயக்குனர் அருட்திரு. ஓ. று. ஜேம்ஸ் அடிகளாரின் அயராத உழைப்புடன், மறைமாவட்டத்திலே பணியாற்றும் இளைஞர், யுவதிகளின் சிறப்பான பங்களிப்புடனும் இனிதே நடைபெற்றதை யாருமே மறக்க முடியாது.

இப்பேற்பட்ட இளைஞர் உருவாக்கும் பணிகளிலே ஈடுபடும் ஆயர் அவர்களை உளமார, நெஞ்சார வாழ்த்துகின்றோம். இன்னும் பல்லாண்டுகள் உடல் சுகத்துடனும், ஆன்மீக பலத்துடனும் வாழ அனைத்து இளையோர் சாப்பாகவும் வாழ்த்துகின்றேன்.

# பொன் குருத்துவ அகவையில் விண் அருள் பெற வாழ்த்து

**"உண்மையாகவே என் வாழ்நாள் எல்லாம்**
**உம் அருள் நலமும் பேரன்பும்**
**என்னைப் புடைசூழ்ந்து வரும்".**
(திரு.பா.23:6)



அழைத்தலின் ஆண்டவர் செப்பிய
அன்பு மொழிதனை அன்னையின்
கருவினில் உணர்ந்தே கரும்பொன்
குருகுல மைந்தனாய் 1974 இல்
விருப்புடன் ஏற்ற குருத்துவ வாழ்வை
பொறுப்புடன் காத்தே பொன்விழா நாயகனானீர்!

1974 இல் முதல் அடிபதித்தே புறப்பட்டீர்
ஆயனற்ற ஆடுகளான வன்னி மண்ணிற்கே
அறிவாற்றலின் புலமை கண்டே - அன்று
ஆயர் அதிமேதகு தியோகுப்பிள்ளை அவர்களும்
அறிவொளியூட்டும் ஆசானாய் - இளவாலை
கென்றியரசர் கல்லூரிக்கு அனுப்பிட்டாரே!

நல்லாசானாய், நற்குருவாய் நடைபயின்று
நற்பணியாற்றியே உப அதிபருமானீர்
காலத்தின் சுழற்சி புரண்டோடிட
கல்லூரியின் தேவையுணர் சேவையாற்றி
அதிபருமாகி 25 ஆண்டுகள் அயராதுழைத்த
அரும்பணியால் அகிலத்தில் ஓங்கியதே நின்புகழ்

கல்விக்களத்தின் கண்ணியம் கொத்தணி அதிபராக்க
வில்லின் அம்பாய் துரத்தியதே இடப்பெயர்வு
சொல்லிலும் செயலிலும் சளைத்திடாது பயணித்தே
ஞானமுடன் செயலாற்றி மறைக்கோட்ட முதல்வரானீர்
மறந்திடுமோ நெஞ்சம் மாறிடுமோ வரலாறு
மாற்றமுடியா மைல் கல்லானீர் இளவையூரில்!

திரு அவையின் தேவை உம் சேவையை மாற்றிட
திரும்பினீரே புனித பத்திரிசியார் கல்லூரிக்கு
தலைமை ஆசானாய் - அதனோடு இணைத்தே
மலையென உயர்ந்த யாழ் மறைக்களத்தில்
குருமுதல்வருமாகிப் புடமிட்டீர் குருத்துவத்தை
வரும் ஆயர் பணிக்கு இஃது வழியாகியதோ

அருள் பொழியும் ஆண்டவரும் மந்தையின்
ஆயன் பணிக்கு உம்மை அழைத்திடவே
பணிவோடு பதிலிறுத்தே பணியேற்றீர் 2015 இல்
மணிமுடியணிந்த மரியன்னை துணையோடு
யாழ் மறை மேய்ப்புப்பணி மாநாட்டைக் கூட்டி
வாழும் மக்கள் விசுவாசம் புதுப்பித்தீர்.

மாண்பாய்க் காத்தீர் குருத்துவ அர்ப்பணத்தை
மாண்புறு மந்தைகள் நம்பிக்கையில் ஒளிரவே
முப்பதாண்டுப் போரின் பிடியில் நலிந்தோர்க்கு
நித்தமும் துணைநின்று வாழ்வியலை வளர்த்தீர்
சத்தமின்றி சிந்தையில் ஞானொளி தாங்கி
சத்திய வேந்தன் இயேசுவின் சீடனுமானீர்

நம்பிக்கைமிகு நல்லூழியனாய் மிளிர்ந்தே
நாம் போற்றும் பொன் யூபிலி நாயகனானீர்

**S.M.வுளோறன்ஸ்**

**எமது ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
**ஆண்டகை அவர்களின் குருத்துவப் பணிவாழ்வின்**
**50வது ஆண்டு (24.04.1974 - 24.04.2024)**
**பொன்விழா ஆயரை மனமகிழ்வோடு வாழ்த்துவோம்**

கருவிலே உம்மைத் தெரிந்தெடுத்து
என் பணிக்கு நீ வாவென்று
படைத்தவன் குரல் அழைத்தபோது
மறுக்காமல் ஆமென்று பதில் சொல்லி
குருவாகி ஐம்பதை நிறைவு செய்தீர்
மகிழ்வோடு வாழ்த்துகின்றோம் ஆயனே

யேசுவின் முத்தான முப்பணிகள்
ஆசிரியர் குரு ஆயர் என்ற
மூன்றையும் அலங்கரித்து அணி செய்து
ஆசானாய் கற்பித்து இமயம் தொட்டு
குருவாக ஆன்மீகப் பணிகள் செய்து
ஆயனாக மந்தைகளை வழிநடத்தி
பொன்விழா காணுகின்றீர் வாழ்த்துகிறோம்

தவறான பாதைகளில் தடம் பதிக்கும்
பாதங்களை நேர்வழியில் சீர்செய்தீர்
குருக்கள் அனைவரையும் பிள்ளைகள் போல்
அரவணைத்துக் கரங்களுக்குள் பாதுகாத்தீர்
கல்வியே வாழ்வுதனை உயர்த்துமென்ற
நல்நோக்கோடு செயற்பட்டீர்வாழ்த்துகிறோம்

கல்வியிலே உயர்பட்டங்கள் பல பெற்று
பாடசாலை குருமடம் பல்கலையில்
உயர்ந்த பதவிகளில் நீர் அமர்ந்து
உருவாக்கல் பணிகளிலே சிறப்புற்றீர்
நம்பிக்கை நல்ஊழியனே உம்மை நாங்கள்
மனதார மகிழ்வோடு வாழ்த்துகின்றோம்

இறைவனோடு எப்போதும் இணைந்திருந்து
மரியன்னை நம்பிக்கையில் ஆழம் பெற்று
உடல்நலமும் உளசுகமும் சிறந்தோங்கி
இன்னும் பல்லாண்டு வாழ்ந்திடவும்
இறையாட்சிப் பணிகள் பல ஆற்றிடவும்
கரம் கூப்பிக் களிப்போடு வாழ்த்துகிறோம்.

முதுரை வரை இறையாட்சிப் பணிசெய்து
இளைப்பாறும் குருக்களில் அன்பு கொண்டு



மகிழ்வோடு அவர்கள்
வாழ வழிவகுத்து நல்லாயன்
நிதியத்தை ஏற்படுத்தி
உயர்ந்து நின்றீர் உம்மை
நாம் வாழ்த்துகின்றோம்

**அலெக்ஸ் அமலரட்ணம்**

# "தங்களின் பணி தொடரட்டும்"

"நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும் அக்கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்". (யோவான் 15:16) எனமொழிந்த தலைமைக் குருவாகிய இயேசு பெருமானின் அழைப்பின் குரலுக்கு, அமைந்த உள்ளத்தோடு 'ஆம்' எனப் பதிலுறுத்தி குருவாக திரு நிலைப்படுத்தப்பட்டதின் 50 ஆண்டு நிறைவில் இறைவனுக்கு நன்றி நவிலும் எமது யாழ். ஆயர். பேரருட்திரு. கலாநிதி

ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களோடு இணைந்து இறை புகழ் பாடுவதில், தீவக அருட்தந்தையர்கள், துறவிகள், இறை மக்களாகிய நாம் மகிழ்வடைகின்றோம். வாழ்த்தியும் நிற்கின்றோம். தூர நோக்குடைய ஆயரின் பணி, ஆயரின் அறிவாற்றல் பணி புரியும் மனப்பாங்கு, அன்பு நிறை, மனிதாபிமானம் கொண்ட தந்தையாகப் பவனி வரும் மாண்பையும், சிறந்த நிர்வாகத் திறமையும், இனிமையாகப் பழகும் பண்பையும் கொண்டவர்தான் குருத்துவப் பொன் விழாக் கொண்டாடும் நமது ஆயர்.


இயற்கை அழகைத் தன்னுள் கொண்டிருக்கும்தீவகத்தின்விசுவாசத்தின்விளைநிலமாகிய கரம்பொனில் பிறந்து வாழ்ந்த ஆயர் அவர்களின் அன்புப் பெற்றோரின் அர்ப்பணிப்பு, ஆயர் அவர்களை ஓர் உயர்ந்த நிலைக்குத் கொண்டு வந்துள்ளது. யாழ். மறைமாவட்டத்தில் பல பணிகளை முன்னெடுத்தாலும், இறை மக்களின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதைத் தன் குறிக்கோளாக்கி மறை மாவட்டம் முழுவதும் செயற்படுத்துவதை அவதானிக்க முடிகிறது.

தீவகத்திலும், ஆன்மீக, கல்விப் பணியை முன்னெடுத்து அல்லைப்பிட்டியில் அமைந்திருக்கும் மொன்போட் சதோதரர்களின் சர்வதேச ஆங்கிலப் பாடசாலையின் அமைவு, ஆயரின் பணிக்கு சான்று பகர்கிறது. அனைத்திற்கும் மேலாக, தமிழ் மக்களின்பிரச்சினைகளை நன்கறிந்து, தேவையான சந்தர்ப்பங்களில் அமைதியான முறையில் குரல் கொடுக் கின்ற ஆயராகவும் இருக்கின்றார். இலங்கை அமைச்சர்கள் உயர்மட்ட அரசியல்வாதிகள், அதிகாரிகளுடன் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், தேவைகள் பற்றியும், நிரந்தர அரசியல் தீர்வுகள் குறித்தும் ஆயர் அவர்கள் பேசத்தவறியதில்லை.

இறைவன் மீது கொண்ட ஆழமான நம்பிக்கையும். அன்னை மரியாள் மீது ஆயர் கொண்ட அதீத பக்தியும், ஆயர் அவர்களைப் பல நிலைகளைக் கொண்ட பணிகளுக்கு உறுதுணையாக இருப்பதாகக் கொள்ளலாம். சிறந்த நல்ல பண்புகளையும், ஆளுமைத் திறன்களையும் கொண்டு கடந்த 50 வருடங்களாக நல்ல குருவாக, நல்ல ஆயனாகப் பணி யாற்றும் உங்களின் பணியில் இறைவனின் அருள்கரம் தொடர்ந்து வழிநடத்த தீவக இறைமக்கள், அருட்தந்தையர்கள், துறவிகள் நாம் வாழ்த்துகின்றோம்.

**தீவக மறைக்கோட்டம்.**






# இளவாலை மறைக்கோட்டத்தில் ஆயர் அவர்களின் பணிப்பதிவுகள்

**இளவாலை - ஆயரின் ஆத்மார்த்தமான பணித்தளங்களில் ஒன்று. அது அழகிய ரதமென நகர்ந்த காலங்கள் என்றுமே பசுமையானவை! தரையும் காற்றும் மரமும் செடியும் கல்விப்புலத்தில் பதித்த தடங்களும் ஆயரின் பெயரை உச்சரிக்கத் தவறியதில்லை. ஆன்மீக வழிகாட்டியாய் கல்விப் பேராசானாய், பாதுகாப்பரணாய், மீழ்குடியேற்றக் காரண கர்த்தாவாய், இளவாலை மண்ணில் வலம்வந்த - இராட்சிய புருஷராய் ஆண்ட காலங்கள் - யுத்த சூனிய அந்திம நேரங்கள் - மயிர்க்கூச்செறியும் திறந்த சிறைச்சாலை அனுபவங்கள் எல்லாம் இந்த சிவந்த மண்ணிலிருந்தே எழுந்தவை ஆயினும், ஆயர் தந்தையாக அவரின் ஆளுகை காலத்தில் இளவாலை மறைக் கோட்டம் அடைந்த நன்மைகளை மட்டுமே இங்கு பட்டியலிடுகிறேன்.**

◆ நூற்றாண்டை நெருங்கும் நவாலித் திருஅவைக் கெனப் புதிய பணிமனை வேண்டுமெனப் பங்கு மக்களால் ஆயரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, அருட் பணி. S. அலின் கருணாகரன் அடிகள் பணி செய்த காலத்தில்

◆ 05.08.2021 அன்று ஆயர் அவர்கள் புதிய பங்குப் பணிமனையை ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார். தளபாட வசதிகள் ஆயர் அவர்களால் வழங்கப்பட்டது. தற்போது அருட்பணி. J.B. அன்ரனிதாஸ் பங்குத்தந்தையாகப் பணியாற்றுகிறார்.

◆ இளவாலை சென் ஜேம்ஸ். இதுவரை இளவாலை புனித அன்னாள் பங்கின் கிளையாக இருந்து தனிப் பங்காக மொட்டவிழ்ந்தது. இதனை நம் ஆயர் 18.01.2021ம் ஆண்டு ஆசீர்வதித்துத் திறந்துவைத்தார். இப்பங்கின் முதல் பங்குத்தந்தையாக அருட்பணி. C.J. ஜெயக்குமார் அடிகள் நியமிக்கப்பட்டார்.

◆ மாதகல் பங்குத்தந்தை அருட்பணி. S. றோய் பேடினன்ட் அடிகளின் காலத்தில் மாதகல் புனித தோமையார் ஆலய வளாகத்தில் சென் தோமஸ் பெண்கள் றோ.க. பாடசாலைக்கென ஒரு கல்விக் கூடத்தை 18.08.2023





அன்று ஆயர் ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார்.

◆ அளவெட்டி புனித சூசையப்பர் ஆலய வளாகத்தில் பங்குத்தந்தை அன்ரனி மேரியன் SSS காலத்தில், ஜோய் செல்வநாயகம் அவர்களின் நிதியுதவியுடன் அமைக்கப் பட்ட லூர்து அன்னை கெபியை 08.10.2022 அன்று ஆயர் திறந்துவைத்தார்.

◆ யுத்தத்தால் தரைமட்டமாக்கப்பட்ட ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு, அருட் பணி.T.E. தேவராஜன் பங்குத் தந்தையாக மீளவும் நியமிக்கப்பட்டு பங்குப்பணிமனை கட்டப்பட்டு, 14.10.2018 அன்று திறந்து வைக் கப்பட்டது. அதன் பின்னர் புலம்பெயர் மக்களின் நிதிப்பங்களிப்புடன் புதிய

◆ ஆலயம் அமைக்கப்பட்டு 30.05.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.



◆ பலாலி புனித ஆரோக்கிய மாதா ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டு 05.08.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

◆ உரும்பிராய்ப் பங்கில் மரியன்னை கெபி 20.02.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

◆ ஆனைக்கோட்டை புனித அடைக்கலமாதா ஆலயப் புதிய பங்குப் பணிமனை பங்குமக்களின் நிதியுதவியு டன் கட்டப்பட்டு 03.06.2020 அன்று ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

◆ குளமங்கால் பங்கின் புனரமைக்கப்பட்ட பங்குப் பணிமனை 05.02.2019 அன்று ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அருட்பணி S.J.C. பாஸ்கரன் காலத்தில் "உத்தான பூமி சிற்றாலயம்" அமைக்கப்பட்டு 24.01.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

◆ சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய 175 ஆவது ஆண்டு (1842 - 2017) நினைவாக மணிக்கோபுரம் 13.06.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது. மேலும் சூராவத்தை புனித திரேசா ஆலயத்தின் 75வது ஆண்டு யூபிலி நினைவாகப் புதிய மணிக்கூட்டுக் கோபுரம் 01.10.2023 திறந்து வைக்கப்பட்டது.

◆ மல்வம் உடுவில் பங்கின் அந்திரான் அன்னை வேளாங்கண்ணி ஆலயம் அருட்பணி S. லீயோ ஆம்ஸ்ரோங் காலத்தில் புலம்பெயர் - உள்ளூர் மக்களின் நிதிப்பங்களிப்புடன் கட்டப்பட்டு. 07.08.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

◆ சில்லாலை சென் ஜேம்ஸ் ஆலயத்தின் புதிய பங்குப் பணிமனை அருட்பணி பாலதாஸ் பிறாயன் காலத்தில் 17.07.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

◆ பாரம்பரிய கத்தோலிக்க கிறிஸ்தவம் தூவப்பட்டு முளை யிட்டு அழகிய செடியாக வளர்ந்ததுதான் வலிகாமம் இறைநம்பிக்கையாளர் திருஅவை. சிவந்த நிலத்தில் வியர்வை சிந்தி மண்ணைப் பதப்படுத்தும் கடின உழைப்பாளர்கள் இவர்கள். இதே பணியை இங்கே விசுவாசம் என்ற நிலத்தில் பிரமாணிக்கத்தோடு மேற் கொண்ட இறைபணியாளர்கள் பலர்! அவர்களுள் ஆளுமைப் பண்போடு பணிசெய்தவர் தான் எம் அன்புக்குரிய ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள். இளவாலை மறைக்கோட்டம் தழுவிய பங்குகள் அனைத்தும் பாசமிகு ஆயர் தந்தை அவர்களுக்கு என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது. மறைக் கோட்டக் குருமுதல்வர் உடன் பணியாளர்கள் இறை மக்கள் அனைவரும் நன்றிப்பெருக்கோடு உளமார ஆயர் அவர்களை

**வாழ்த்துகின்றோம். நீடிய ஆயுளோடு தொடர்ந்து இறைவல்லமையின் துணையோடு பணிசெய்ய எம் செபங்களில் அவரைத் தாங்கிச்செல்வோம்.**

**அருட்பணி S.A. அருட்செல்வன்**

நன்றி: ஆயரின் பொன்விழா மலர்

# கிளிநொச்சி மறைக்கோட்டத்தில் ஆயரின் பணி

கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர், குருக்கள், துறவிகள், இறைமக்கள் சார்பிலே எமது இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எம் தேசம் போரின் வடுக்களைத்தாங்கி உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில், உணர்வுகள் ஊமையாக்கப்பட்ட நிலையில், உறவுகள் இழக்கப்பட்ட நிலையில், ஏங்கித்தவித்த எம் மக்களுக்கு புதிய ஒளிக்கீற்றாய் எம் ஆயரின் பணி அமைந்தது.

பரந்தன் புனித அந்தோனியார் ஆலயம் மக்களின் வழிபாட்டுக்கு ஏற்ப புனரமைக்கப்பட்டு 11.06.2022 அன்று ஆயரால் திறந்துவைக்கப்பட்டது.

உருத்திரபுரம் புனித பற்றிமா அன்னை ஆலயத்திற்கு புதிய முகப்பு 2021ம் ஆண்டு அமைக் கப்பட்டது. கோணாவிலில் புனித செபஸ்ரியார் ஆலயம் புதிதாக அமைக்க 2024ம் ஆண்டு நிதியுதவியினை ஆயர் வழங்கி நின்றார்.

வட்டக்கச்சிப் பங்கில் 2023ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட கல்மடு புனித அந்தோனியார் ஆலயத்தின் கட்டடத்திற்காக ஆயர் நிதிப்பங்களிப்பைச் செய்து புதிய ஆலயத்தினை அமைத்துக் கொடுத்தார்.

அக்கராயன் பங்கில் இறை மக்களின் ஆன்மீகத் தேவையை நிறைவேற்றும் முகமாக மணியங்குளத்தில் அற்புத குழந்தையேசு ஆலயத்தினையும், கோட்டைகட்டிய குளத்தில் விண்ணக மண்ணக அரசி ஆலயத்தினையும், ஸ்கந்தபுரத்தில் புனித அந்தோனியார் ஆலயத்தினையும் அமைக்க நிதி உதவி வழங்கியதோடு ஆலோசனைகளையும் பல வழிகளிலும் ஆதரவையும் வழங்கி வருகின்றார்.

இரணைமாதாநகர் மக்கள் கட்டி முடித்த ஆலயத்தின் திறப்பு விழாவில் இணைந்து புனித செபமாலை அன்னையின் பெயர் கொண்ட ஆலயத்தை அபிஷேகம் செய்து திறந்து வைத்து நன்றியோடு கூடி நின்ற எம் மக்களின் அயராத உழைப்பின் மேன்மையினை நன்றிப் பலியாக ஒப்புக் கொடுத்தார். அத்தோடு ஆலயக் கட்டுமானப் பணிக்காக உதவி கோரிய போது ஜெயபுரம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு நிதியினை வழங்கி உதவி செய்தார்.

கிளிநொச்சி அம்பாள்குளம் புனித சதாசகாய அன்னை ஆலயம் ஆயரின் பங்களிப்புடன் கட்டப்பட்டு 21.07.2019 திறக்கப்பட்டது. அதேபோன்று போரினால் முற்றிலும் சேதமடைந்த முறிகண்டி செல்வபுரம் தூய குழந்தை இயேசு ஆலயம் 2018ம் ஆண்டு ஆயரின் பங்களிப்புடன் கட்டப்பட்டு 20.05.2018 திறக் கப்பட்டது.

மல்லாவிப் பங்கில் வவுனிக்குளத்தில் யாழ் மறைமாவட்ட கல்வாரி பூங்காவினை திறந்து வைத்து அதற்கான உதவிக்கரங்களையும் வழிகாட்டுதல்களையும் தந்து இருக்கின்றார்.

குமுழமுனைப் பங்கில் புனித தோமையார்



ஆலயம் புதிதாக அமைப்பதற்கு அனுமதி வழங்கி ஆலயத்திற்கு நிதி உதவியும் வழங்கியுள்ளார். புனித யாகப்பர் ஆலயத்தின் புனரமைப்புக்கு உதவினார். நொச்சிமுனை புனித பேதுரு ஆலயத்தைப் புதிதாக அமைக்க உதவினார். புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தைப் புதிதாக அமைத்துத் திறந்து வைத்தார்.

**மக்களின் வாழ்வியலின் துயரினில்**

எம் ஆயர் "கரித்தாஸ் இலங்கை செடேக்" தேசிய நிறுவனத்தின் தலைவராக இருந்துகொண்டு கரித்தாஸ் வன்னி கியூடெக்கின் ஒவ்வொரு அசைவுகளையும் அவதானித்து, பல செயற்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றார்.

கிளிநொச்சி அறிவியல் நகர் பல்கலைகழக வளாகத்தில் கிறிஸ்து அரசர் ஆலயம் 2022ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கல்வியோடு இணைந்து ஆன்மீகமும் வளர்க்கப்பட்டு வருகிறது. அத்துடன் கிளிநொச்சி புனித திரேசாள் பெண்கள் கல்லூரியில் ஆசிரியப்பணியை மேற்கொள்வதற்காகவும், கிளிநொச்சிப் பங்குப்பணிகளில் ஈடுபடுவதற்காகவும் ஆயர் அவர்களின் முயற்சியினால் 2021ம் ஆண்டு கார்மேல் அருட்சகோதரிகள் தங்கள் பணியை ஆரம்பித்தனர். மேலும் எமது



யாழ் ஆயர் அவர்களின் ஆசீர்வாதத்துடனும், வழிநடத்தலுடனும் 2019ம் ஆண்டு கிளிநொச்சி கரடிப்போக்கில் அமைந்திருக்கக்கூடிய இடத்திற்கு சலேசியன் துறவற சபைக்குருக்கள் வருகை தந்து 20.03.2023 ஆங்கில மொழிமூலமான தனியார் பாடசாலையையும், இளையோர்களின் வேலை வாய்ப்பிற்குத் தேவையான தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றையும் ஆரம்பித்து செயற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

(தொடர்ச்சி 9 ம் பக்கம்)

நன்றி: ஆயரின் பொன்விழா மலர்

# மருதமடு அன்னையின் வருகையில் எழுச்சி கண்ட யாழ் மறைமாவட்டம்



### வரலாற்றுக் குறிப்புக்கள் சில..

1543இல் பிரான்சிஸ்கன் மிசனரியினரின் காலத் தொன்மையுள்ள மடுத் திருத்தலம் ஏறக்குறைய 300 ஏக்கர் ஒதுக்கப்பட்ட வன்னி அடர்ந்த காட்டுப் பகுதியில் நிலை கொண்டுள்ளது. மடுதமடுத் தாயாரின் திருச் சுருபம் வீற்றிருக்கும் இப் புனித பூமித் திருத்தலம் கொழும்பு மாநகரிலிருந்து கிட்டத்தட்ட 290 கிலோ மீற்றர் தொலைவில் வட பிராந்தியத்தின் மாந்தைப் பிரதேசத்தில் தற்போது மன்னார் மறைமாவட்டத்தில் அமைந்துள்ளது என்பது யாவரும் அறிந்ததே.

ஏறக்குறைய 16 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மறையைத் தழுவிய இறை மக்கள் யாழ்ப்பாண மன்னனாலும் பின்பு டச்சுக்கார அரசின் துன்புறுத்தலினாலும் புலம் பெயர்ந்து மாந்தை வடக்குப் பகுதியில் ஒழிந்து கொண்ட போது மருதமடு மாதாவின் திருச்சுருபத்தை நிறுவி அவரது தாய்மையின் அரவணைப்புக்குள் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறு தொடக்கத்தில் இருபது கத்தோலிக்கக் குடும்பங்கள் ஒழிந்திருந்த நிலையில் யாழ் குடா நாட்டில் இருந்து 700 கத்தோலிக்கர் வன்னிக காடுகளை நோக்கிப் புலம் பெயர்ந்து மருதமடு பகுதியில் மருதமடு அன்னையின் பக்தர்களாக இணைந்து கொண்டனர்.

ஒரற்ரோறியன் குருவாகிய யோசவ்வாஸ் காலத்தில் அதாவது 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் மருதமடு தாயாரின் கோவில் சிற்றாலயமாக உருவெடுத்தது. 1796 இல் பிரித்தானியர்களின் வருகையின் பின்பு 50 000 மக்களைக் கொண்ட கிறிஸ்தவ சமூகத்தினர் மடு அன்னையின் திருத்தலத்தை நோக்கி திருயாத்திரை மேற்கொள்ள தொடங்கினர்.

1847 இல் இலங்கை மண்ணில் மறைபரப்பாளர்களாகக் காலடி வைத்த அமல மரித்தியாகிகளின் வருகை மரியாள் பக்தியில் ஒரு புதிய யுகத்தைப் பிறப்பித்தது. யாழ் ஆயராக இருந்த ஆயர் பொன்ஜின் அவர்கள் 1872 இல் ஒரு புதிய ஆலயத்தைக் கட்டியெழுப்பத் தொடங்கிய பணி அவரைத் தொடர்ந்து பொறுப்பேற்ற ஏனைய ஆயர்களாலும் கட்டட விரிவாக்கமும் யாத்திரிகர்களுக்கான வசதிகளும் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டன.

### மரியாவின் தரிசனங்களும் திரு அவையின் அங்கீகாரங்களும்

2000ம் ஆண்டு வரலாற்றில் 1000க்கும் மேலான தடவைகளில் மரியாள் மக்களுக்கு தரிசனம் கொடுத்துள்ளாள். அவை உண்மையாக இருப்பினும் எல்லாவற்றையும் திரு அவை உத்தியோக பூர்வமாக அங்கீகரிப்பதில்லை. காரணம்

திருத்தந்தையர்கள் அன்னையின் தரிசினங்களையும் அவரது அருள் வளங்களையும் தீரவே ஆராய்ந்து தீர்க்கமான முடிவை எடுப்பதில் அதிக கவனம் எடுப்பது வழக்கம். அன்னை மரியா யுவான் தியாகோ எனும் பூர்வீக அடியவருக்கு 1531 இல் மெக்ஸிக்கோ நகரில் உள்ள குவாட லுபோயில் 5 தடவைகள் தன்னை தோற்றுவித்தார். திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர் பெப்ரவரி மாதம் 8 இல் 1887 இல் மரியன்னை திரு உருவத்திற்கு உத்தியோக பூர்வ முடி சூட்டுதலை வழங்கினார். (Pontifical Coronation)

பிரான்ஸ் நாட்டில் உள்ள லூர்து கேபியில் 1857 இல் 14 வயது பெர்ணதேத் என்ற சிறுமிக்கு 9 தடவைகள் மரியாள் தரிசனம் கொடுத்தார். 1890 பெப்ரவரி 11 திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர் மறைமாவட்ட ரீதியாகவும் 1907 நவம்பர் 17இல் திருத்தந்தை 10 ஆம் பத்திநாதர் இத்தரிசனம் உண்மையானது என அங்கீகரித்தார்.

அன்னை மரியாள் திருச் செபமாலை அன்னையாக 1917 இல் போத்துக்கலில் உள்ள பத்திமா எனும் ஊரில் 3 இடையர் சிறுவருக்குக் காட்சி கொடுத்தார். அவர்கள் லூசியா பிரான்சிஸ் மற்றும் ஐசிந்தா ஆவர். திருத்தந்தை 12 ஆம் பத்தி நாதர் 1946 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக முடிசூட்ட அனுமதி அளித்தார்.

1798 இல் வியட்நாமில் இடம்பெற்ற வேத கலாபனையின் போது துன்புறும் மக்களுக்கு மரியாள் La Vang எனும் இடத்தில் காட்சி கொடுத்தார். இந்தியாவில் தமிழ் நாட்டில் உள்ள வேளாங்கண்ணி எனும் சிற்றூரில் ஆரோக்கிய அன்னையாகக் காட்சி கொடுத்து அவளுடைய புதுமை ஆற்றும் தூய பிரசன்னம் அங்கு போற்றப்பட்டு வந்தாலும், திருத்தந்தையின் உத்தியோக பூர்வ அதிகாரம் இன்னும் கிடைக்கவில்லை.

### மருத மடு மாதாவின் முடிசூட்டு விழா.

1920 இல் யாழ் ஆயராகப் பணியாற்றிய ஆந்திரே யுலஸ் பிறவ்ல்ட் (André Jules Brault) மடு அன்னையின் திருச் சுருபத்திற்கு முடி சூட்டுவதற்கான திருத்தந்தையின் அதிகார பூர்வ அனுமதியைத் திருத்தந்தை 15ஆம் பெனடிக்ட் அவர்களிடம் கோரினார். 1921 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ஆம் நாள் நற்செய்தி அறிவிப்புப் பேராயம் (Cardinal Willem Marinus van Rossum) வழியாக திருத்தந்தை அவர்கள் அனுமதி வழங்கினார். 1924 யூலை 2ஆம் நாள் அதாவது மடுத்திருப்பதித் திருநாளன்று ஆயர் கியோமர் தலைமையில் மடு அன்னையின் திருச் சுருபம் முடி சூட்டப்பட்டு அவ் விழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

1947 ஆம் ஆண்டு அமலமரித்தியாகிகளின் வருகையின் 100 வது ஆண்டை சிறப்பிக்கும் முகமாக மடு அன்னையின் திருச்சுருபத்தை அப்போது நிர்வாகத்திலிருந்த யாழ் மறைமாவட்டத்தின் எல்லைகளுக்கு எடுத்துச் சென்று மடு அன்னையின் புகழ்பாடி, அவரின் பரிந்துரைகளை நாடி மடு அன்னையின் பக்தியை இறைமக்கள் வாழ்வில் வளர்ப்பதன் ஊடாக அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. முடி சூட்டும் பெரும் நிகழ்வின் 50வது பொன் விழாவை முன்னிட்டு மீண்டுமாக 1974 இல் யாழ்ப்பாணம் மறை மாவட்டத்தின் பெரும்பான்மையான பங்குத்தளங்களைத் தரிசிக்க மடு தாயின் தேர்ப்பவனி இடம்பெற்றது.

யாழ் ஆயர்களான ஆயர் கியோமர், ஆயர் எமிலியானுஸ்பிள்ளை, ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை போன்றோர் மடுத் திருப்பதியை வளர்ப்பதற்கு அரும் பாடுபட்டார்கள். 1981 மன்னார் மறைமாவட்டம் ஒரு தனி மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயர்களான ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், ஆயர் இராயப்பு யோசேப்பு போன்றவர்கள் மடுத்திருப்பதியில் கட்டுமான பணிகளிலும், யாத்திரிகர்களின் நலனுக்கான ஈடுபாடுகளிலும், யாத்திரைத் தலத்தின் புனிதத் தன்மையைப் பேணுவதிலும் அதிக கவனம் செலுத்தினர்.

மேற்கூறிய ஆயர்கள் திருவிழாக் காலங்களிலும் மற்றும் ஏனைய சிறப்பு நாட்களிலும் அர்த்தமுள்ள வழிபாடுகளை நடாத்தி மரியன்னையின் அருட்கர ஆசிகளை பக்தர்கள் நிறைவாகப் பெற வழிசமைத்துக் கொடுத்தனர்.

### மருத மடு அன்னையின் திருத்தல விழாக்கள்

முதல் வருடாந்தத் திருவிழா யூலை 2 1870 இல் கொண்டாடப்பட்டது. ஆடி மாதம் 2 ஆம் திகதி ஆவணி மாதம் 15 ஆம் திகதி (விண்ணேற்ப்பு விழா) ஐப்பசி மாதம் முதல் சனி (திருச்செபமாலை விழா) ஆகியவை வர்த்தமானித் திருவிழாக்களாகவும் மற்றும் மார்ச் 25ஆம் நாள் (கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு திரு நாள்) மே மாதம் 31ஆம் நாள் (மரியாள் எலிசேபத்தை மினவுதல்) செப்ரம்பர் மாதம் 8 ஆம் நாள் (மரியன்னையின் பிறப்பு) விழா டிசம்பர் 8 (அமல உற்பவம் விழா) மற்றும் கிறிஸ்மஸ், ஈஸ்டர் ஆகிய விழாக்கள் ஆயத்த நவநாட்கள், திரிதின நாட்கள் போன்ற ஆயத்த வழிபாடுகளுடன் கொண்டாடப்படுகிறது.

### மருத மடு அன்னையின் சிறப்பும் மேன்மையும்

மேலும் வடக்கிலும் தெற்கிலும் உள்ள பங்குத்தளங்கள் கிறிஸ்தவ குழுமங்கள் பக்திச் சபைகள் என பக்தர்கள் தமக்குரிய பாணியில் அன்னையின் திருத்தலத்தை சந்தித்து மன்றாடி ஆசீர்கள் பெற்றுச் செல்வர். திருவிழாக்களின் போது ஆயர்கள், குருக்கள் துறவியர்கள் ஏராளமானவர்கள் இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களிலிமிருந்து கலந்து சிறப்பிப்பதும் மருத மடு அன்னைக்கு சிறப்புச் சேர்ப்பதன் அடையாளமாகும்.

அது மட்டுமல்ல நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து அன்னையின் பக்தர்கள் இன மத மொழி வேறுபாடு இன்றி தமிழர், சிங்களவர் கத்தோலிக்கர்கள் இந்துக்கள் பௌத்தர்கள் யாவரும் ஒன்று கூடி மடுத்திருப்பதியில் சங்கமம் ஆகுவது இலங்கை நாட்டில் வளர்க்கப்பட வேண்டிய சகோதரத்துவத்துக்கான குறிக்கோளை எட்டியுள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2015 ஜனவரி 13 இல் இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கையின் அப்போஸ்தலரான யோசவ்வாஸ் அடிகளாரை புனித நிலைக்கு உயர்த்திய போது ஜனவரி 14 ஆம் நாள் மடுத்திருப்பதியைத் தரிசித்து இலங்கையின் அமைதிக்காகப் பரிந்துரைத்து மடு அன்னையின் திருச் சுருப ஆசியை இந்நாட்டு மக்களுக்கு வழங்கியது வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும்.

450 ஆண்டுகளுக்கு மேலான சிறப்புமிக்க மடு அன்னையின் திருத்தலம் ஒரு புனித பூமியாகவும் "ஓ அன்னையே உன் பிள்ளை நான்" என்று ஓடி வரும் யாத்திரிகர்களுக்கு தஞ்சம் கொடுக்கும் தாயாகத் திகழ்கிறாள். செபமாலை மாதாவாகப் பெயர் கொண்ட அன்னை வேத கலாபனைகளின் போது நம்பிக்கையாளர்களைப் பாதுகாத்தவர்.

1868, 1878 போன்ற காலப்பகுதியில் ஏற்பட்ட பஞ்சம், கொலோரா (black death) தொற்று நோய்களின் போது ஆரோக்கியம் அளித்தவள், கானகத்தில் பெருகி கிடக்கும் பாம்புகள் நச்சுப்பூச்சிகள் விஷங்களிலிருந்து உயிர்களைப் பாதுகாக்கின்றாள். கண்ணீரோடு வருகின்ற பக்தர்களை தேற்றுகின்றவளாக விளங்குகின்றாள்.

### உள்நாட்டுப் போருக்கு மத்தியில்

இந்த ஆலயம் 1990 ஆம் ஆண்டு முதல் ஆயிரக்கணக்கான அகதிகளைத் தங்க வைத்துள்ளது. இருப்பினும் மருத மடுத் திருப்பதி காலத்துக்கு காலம் பல சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. 1999 இலையுதிர் காலத்தில், இராணுவம் இல்லாத பகுதியாகக் காணப்பட்ட மடுப் பகுதியில் 10,000க்கும் மேற்பட்ட அகதிகள் தஞ்சம் புகுந்தனர்.

நவம்பர் 20, 1999 அன்று, அப்பகுதி ஷெல் தாக்குதலுக்கு உள்ளானது, 44 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 60 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஒவ்வொரு தரப்பினரும் மற்றவரைக் குற்றம் சாட்டினர்.

### மருதமடு அன்னையின் திருப் பயணங்கள்

1949 இல் மடுமாதாவின் முடி சூட்டு விழாவின் முன்னோடியாக செபமாலை ஓதுதல் எனும் கருப் பொருளில் யாழ் மேற்றிராசனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.
1974 இல் மடுமாதாவின் 50 வருட முடி சூட்டு விழா ஞாபகமாக மனம் திரும்புதல் எனும் கருப் பொருளில் யாழ் மேற்றிராசனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மருதமடு அன்னையின் முடி சூட்டுவிழாவின் நூற்றாண்டு நிறைவில் மன்னார் ஆயர் இம்மானுவல் பெர்ணாண்டோ தலைமையில் மன்னார் மறைமாவட்ட அனைத்துப் பங்குத் தளங்களுக்கும் மருதமடு அன்னையின் திருச் சுருபத்தை ஜனவரி 07-28 பின்னஉ ஏப்ரல் 02-5, 2024 காலப்பகுதியில் பவனி வர ஆவன செய்யப்பட்டு பக்தர்களின் பிரமாண்டமான வரவேற்பும் உருக்கமான வேண்டுதல்களும் இடம்பெற்றது.

### யாழ் மறைமாவட்டத்திற்கு மருதமடுத் தாயாரின் வரவேற்பு (வருகை)

யாழ் மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் அவர்களது அழைப்புக்கு அமைய யாழ் மறைமாவட்டத்துக்கு சித்திரை 06-30, 2024 காலப்பகுதியில் மருதமடு தாயின் திருப் பயணம் இடம்பெறத் திட்டமிடப்பட்டது. யாழ் மறைமாவட்ட ஆயத்தக் குழு குரு முதல்வர் தலைமையில் நேர்த்தியான திட்டமிடலும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

வழிபாடுகள் திருப்பலிகள் பக்திச் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கான கைத் துணை நூல் திருவழிபாட்டு ஆணையகத்தினால் வெளியிடப்பட்டது. மறைமாவட்டத்தின் பங்குகளுக்கு அன்னையின் திருச் சுருப வருகை ஒழுங்கானது, ஆலயங்களில் திருச் சுருபம் வணக்கத்திற்காக வைக்கப்படும் நேர அளவின் அடிப்படையில் யுஇடீஇஊ என மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழிபாட்டு ஒழுங்குகளை நேர அளவிற்கேற்பவும்,தேவைக்கேற்பவும் ஒழுங்கு செய்யுமாறும் பங்குத்தந்தையர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

ஆலயங்களை மையமாகக் கொண்டு திருப்பலிகள் நற்கருணை ஆராதனைகள் அன்னையின் பாடல்கள் ஆரப்பரிப்புக்கள் திருச் செபமாலை மன்றாட்டு மாலை தொடர்ந்து திருச் சுருப வணக்கம் அன்னையை நோக்கிய பிரியாவிடைச் செபம் அன்னையின் திருச் சுருப ஆசீர் வாதம் போன்றவை இடம்பெற்றன. இவற்றின் மத்தியில் அன்னையின் பக்தர்கள் அன்னையின் திருச் சுருபத்தை தொட்டு மன்றாடுவதில் எல்லோரும் பக்தியோடு கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டமை பெரும் பாக்கியமாகக் கருதப்பட்டது.

### சில சவால்களும் சந்தேகங்களும்

சிலர் இது என்ன சிலை வழிபாடா என்றனர். வேறு சிலர் இத்தனை ஆடம்பரம் தேவைதானா என்றனர். மற்றும் சிலர் உட்பூசல்களையும் போட்டி மனப் பான்மையையும் முன்னிறுத்தி அன்னையின் வருகையில் தமக்கு விளம்பரம் தேடிக் கொண்டனர். ஒட்டுமொத்த நோக்கில் இவை நூற்றுக்கு ஒரு விதமான மனித பலவீனத்தில் வெளிக் கொணரப்பட்ட விடயமாகும்.

### மருதமடு அன்னையின் யாழ் வருகையில் விழைந்த அனுகூலங்களும் ஆசீர்களும்

◆ இயேசுவின் தாய் மரியாள் வாழ்வில் மிளிர்ந்த நற்பண்புகளான தளராத இறைநம்பிக்கை, இறை அருட்கரத்தில் நம்பிக்கை கொண்ட தாழ்ச்சிப் புத்துணர்வில் பிறக்கும் பிறரன்புச் சீடத்துவத்தின் வெளிப்பாடான உடனிருப்பு இறைவார்த்தைக்கு அடி பணியும் தியாகம், தூய்மையான வாழ்வில் பிறந்த தாய்மை, இவை போன்ற மரியாவின் ஆளுமையை சித்தரிக்க நற்செய்தியாளரோடு மரி அன்னையை வியந்து பாராட்டி அவரை இருளில் மிளிரும் விண்மீனாக இறைமக்கள் கண்டனர்.

◆ மருதமடுத் தாய் மட்டில் மக்கள் கொண்ட நம்பிக்கை காலத்துக்குக் காலம் தனித்தும் குடும்பமாகவும் கூட்டமாகவும் இழைத்துக் களைத்து யாத்திரை செய்த பக்தர்களை நாடி மரியாள் ஊர்த்தியில் வலம் வந்த போது எம்மை நோக்கி வருகின்ற அவரது வதனம் கண்டு கரம் விரித்து உளம் கனிந்து மன்றாடி நின்ற பக்தர்கள் பல ஆயிரம்.













அருட்பணி அ. ஜீவா போல் அ.ம.தி

◆ அன்னையின் வருகையை முன்னிட்டு நடாத்தப்பட்ட ஆயத்த வழிபாடுகளில் பங்கேற்ற மக்கள் அவரது வருகையினால் மனம் மாற்றம் பெற்று ஆறுதலும் உள ஆற்றுகையையும் அனுபவித்து வாழ்வில் எழுச்சி கொண்டு அவரது வருகை தம் வாழ்நாளில் கிடைத்த பெரும் பாக்கியம் என புதிய விடியலைச் சந்தித்த மக்கள் ஏராளம்.

◆ அன்னையின் வருகைக்காக குதூகலத்துடன் சோடினைகளிலும் வீதி வளாக சுத்திகரிப்புகளிலும் வழிபாடுகளை நெறிப்படுத்த அவற்றை மெருகூட்ட செய்த முயற்சிகளிலும் நடன வாத்திய இசைகள் பாடல்கள் வழியாக மேற்கொண்ட வேண்டுதல்களிலும் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன அணிவகுப்புகளிலும் பங்கேற்ற சிறியோர் முதல் முதியோர் ஈறாக அனைவரின் வாழ்விலும் எழுச்சியும் உற்சாகமும் பக்தியும் மேலோங்கி நின்றதைக் காணக் கூடியதாயிற்று.

◆ இரவு - பகல், வெய்யில்- மழை, சாதி -சமயம், ஏற்றத் தாழ்வு பாராது மருதமடுத் தாயின் அடைக்கலத்தில் தம் வாழ்வில் ஏக்கங்களையும் கண்ணீர்களின் பெரும் மூச்சுக்களின் காணிக்கையாக சமர்ப்பித்து அம்மா தாயே என்று அழைத்து அவரது பாத வடிகளை முத்தி செய்வதை தவிர வேறு வழியில்லை என்ற நம்பிக்கைகளில் மரியாள் பக்தி பக்தர்கள் உள்ளத்திலும் சுடர் விட்டு எரிவதையும் அடையாளம் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது.

◆ மேலும் ஒவ்வொரு பங்குத்தளத்திலும் அரை மணி நேரம், ஒரு மணி நேரம், மூன்று மணி நேரம், பன்னிரண்டு மணி நேரம் என்று சந்திப்பின் நேரம் வகுக்கப்பட்டு இருந்தாலும் இரவோ பகலோ என்று பராது ஒவ்வொரு மணித்துளியையும் பசி நோக்காது, கண் துஞ்சாது, கருமமே கண்ணாயிருந்து மருதமடு அன்னையின் திருச்சுருபத்தின் பிரசன்னத்தில் மூழ்கி அதிலும் கிறிஸ்தவரோடு இந்து சமய சகோதரங்களும் இணைந்து கொண்டமை யாவருக்கும் ஒரு வியக்கத்தக்க அனுபவமாக இருந்தது.

◆ தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் அரசியல், பொருளாதாரம், சமூக, சமய, அடிப்படை வாத பிரதேச வாத பிரிவினைகள் மத்தியிலும் பேதங்கள் கலைந்து ஒரு தாய் சேய் உறவில் ஒன்றுபட்டமை அனைவரையும் இன்னும் வியப்பில் ஆழ்த்தியது.

◆ மருதமடு அன்னையின் வருகை குருக்கள் துறவியரைப் பொறுத்தளவில் மரியாள் மீது கொண்டிருந்த நம்பிக்கையை வலுப்படுத்துகின்ற ஒரு சந்தர்ப்பமாக அமைகின்றது. மருதமடு தாயில் வைத்திருந்த ஆழமான நம்பிக்கையையும் மரியாள் கூறும் செய்திகளுக்கு சான்று பகர்ந்து மரியா பக்திக்கு நீர்ப்பாய்ச்சி வளப்படுத்தும் அரிய சந்தர்ப்பமாக இத் திருப்பயணம் நல்ல விளைச்சலைக் கண்டுள்ளது என்பதில் ஐயமில்லை.

◆ மரியன்னையின் திருப்பயணம் கத்தோலிக்க அமைப்பு எல்லைகளைத் தாண்டி பாதுகாப்புப் பிரிவினரையும் அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்களையும் நன்கொடையாளர்களையும் ஊடகத் துறையினரையும் ஊடறுத்து அவர்களின் நல் எண்ணமும் ஒத்துழைப்பும் அவர்களது பங்களிப்பும் மரியன்னையின் பக்தியை அவர் வழியாக இறைவன் பொழியும் அருள் வளங்களையும் உலகறியப் பரவிக் கிடக்கிறது.

[illegible]

## திருமண சேவை

### மணமகன் தேவை

வயது : 28
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: BSc Hon's Computation and Management (University of Peradeniya)
தொழில் : Senior Digital Marketing Manager
பிரதேச செயலகம் : வவுனியா
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
பட்டதாரி - Jobs Preferred: Government Servants Software Engineer, Accountant, Business analyst, Bank executive, Foreign Country also preferred.

---

வயது : 35
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: கலைப்பட்டதாரி
தொழில் : பட்டதாரி ஆசிரியர்
உதவி அரசாங்க பிரிவு : கரைச்சி
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
நல்ல குணம் கொண்டவராகவும், அரச உத்தியோகம் அல்லது தனியார் நிறுவனம்.

---

வயது : 35
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: IT, H.N.D
தொழில் : முன்பள்ளி ஆசிரியர்
உதவி அரசாங்க பிரிவு : யாழ்ப்பாணம்
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
அரச அல்லது தனியார் நிறுவனம்.

---

வயது : 24
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: G.C.E. A/L, B.Com (Following)
தொழில் : Management Service Officer at Health Department
பிரதேச செயலகம் : வலி தென் மேற்கு சண்டிலிப்பாய்
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
நல்ல குணமுடைய கத்தோலிக்க சமயப் பெண், அரச தொழில் உடையவர்.

---

வயது : 40
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: கலைப் பட்டதாரி
(Arts Degree Berming University London)
தொழில் : Charity Worker (Water Aids - Nelson Manala Foundation)
நாடு : பிரித்தானியா வாழ்க்கைத்துணை பற்றிய எதிர்பார்ப்பு:
மணமகன் இலங்கை தமிழராகவும், றோமன் கத்தோலிக்கராகவும், பிரித்தானியாவை வதிவிடமாகக் கொண்ட பட்டதாரியாகவும் இருக்கணும்.

---

வயது : 33
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: G.C.E. A/L
அரசாங்க அதிபர் பிரிவு : உடுவில்
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
- நிரந்தர வேலை உடையவர்

---

வயது : 32
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: B.A
தொழில் : நல்லூர் பிரதேச சபை D/O
பிரதேச செயலகம் : J/96 நல்லூர்
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
படித்தவர், உத்தியோகம் உள்ளவர்

---

வயது : 34
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: B.A. (Reading M.Ed)
தொழில் : ஆசிரியர்
பிரதேச செயலகம் : யாழ்ப்பாணம்
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
உள்ளூர், அரசாங்க உத்தியோகம், வெளிநாடு (அவுஸ்ரேலியா, பிரித்தானியா)

---


### மணமகள் தேவை

வயது : 39 தொழில்
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: Bachelor of Business Administration London (8 Years in London)
தொழில் : Working as a manager at V.F.S.Global Lanka LTD
பிரதேச செயலகம் : Colombo North
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
அரசாங்க அல்லது தனியார் துறையில் தொழில் புரிதல் (பட்டதாரி விரும்பத்தக்கது)

---

# அன்பின் மகிழ்வு

**09**



நம் திருத்தந்தை விருந்துண்ண அமர்ந்து இருக்கும் ஓர் அழகான குடும்பத்துக்குள் நம்மை அழைத்துச் சென்று அங்கேயுள்ள கணவன் மனைவி உறவைத் தெளிவுபடுத்துகின்றார். குடும்பத்தின் மையம் கணவன், மனைவி. இவர்கள் இருவருக்கும் ஓர் தனிப்பட்ட காதல் கதை உண்டு. இந்தத் தனித்துவமான காதல் கதையுடன் இந்தத் தம்பதியினர் மாலை வேளையில் தங்கள் பிள்ளைகளோடு அன்பின் பிணைப்பில் அமர்ந்து இருக்கும் காட்சி மிக அழகானது, இனிமையானது. தொடக்க நூல் திருமணத்திற்குக் கொடுக்கும் வரவிலக் கணத்திற்கு இது உயிர் கொடுக்கின்றது.

படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் "ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்" (மத். 19:4) என்று தொடக்க நூல் மிகவும் அழகாகக் கூறுகின்றது. கடவுள் உலகத்தை அழகாக உருவாக்கி, இறுதியில் ஆதாமைப் படைத்தார். உலகம் முழுவதையும் அதில் உள்ள எல்லாவற்றையும் ஆதாமுக்குக் கொடுத்த போதும், ஆதாம் அதில் நிறைவு ஒன்றும் காணவில்லை. அவனுக்குள் ஓர் தனிமையுணர்வு நிறைந்து இருந்தது. ஏனெனில் அவனுக்குத் தேவையான துணையை இந்த உலகில் அவன் காணவில்லை. எனவே தான் கடவுள் ஆதாமுக்கு ஆழ்ந்த தூக்கத்தை ஏற்படுத்தி அவனின் விலாவில் ஒன்றை எடுத்து ஆதாமுக்கு ஓர் வாழ்க்கைத்துணையை ஏற்படுத்தினார். தன் வாழ்க்கைத் துணையைக் கண்ட ஆதாமுக்கு ஒரு பெரும் மகிழ்வு. எனவே ஆதாம் மிகந்த மகிழ்வில் அகமகிழ்ந்து கொள்கின்றான். "இவள் என் சதையின் சதையும் என் எலும்பின் எலும்புமாக இருக்கின்றாள்" இங்கே ஓர் பேருண்மை வெளிப்படுத்துகின்றது.

ஏன் இருவர் திருமணம் செய்கிறார்கள். திருமணத்தின் பிரதான நோக்கம் வாழ்க்கைத்துணை. எனவே திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்று நம் முன்னோர்கள் சொல்லுவார்கள். ஆயிரம் காலம் வாழ வேண்டிய பயிர் திருமணம். இது ஓர் ஒப்பந்தம் அல்ல. இது ஓர் உடன்படிக்கை. என்னும் பிரிக்கப்படாத ஓர் பந்தமாகும். எனவே தான் தொடக்க நூல் இந்தப் பந்தத்தைப் பற்றி மிகத் தெளிவாக இவ்வாறு குறிப்பிடுகின்றது. இதனால் தான் 'கணவன் தன் தாய் தந்தையை விட்டு விட்டு தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான், இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள்' (தொ.நூல் 2:24)

எனவே திருமணத்தில் தம்பதிகளின் அன்பு தனித்துவமானது. இதற்குப் பொறுத்தமான அழகான பாடல் ஒன்று உண்டு. 'இங்கே நீயொரு பாதி நானொரு பாதி, இங்கு யார் பிரிந்தாலும் வேதனை பாதி' கணவனும் மனைவியும் பாதி பாதி. இந்தத் தம்பதிகளின் உலகம் தனித்துவமானது. இந்த உலகத்தினுள் மூன்றாவது நபர் இவர்களைப் பிரிக்க முடியாது. இன்று பல திருமணங்கள் முறியக் காரணம் கணவன் மனைவி இடையில் பெற்றோரின் தலையீடு. தம்பதிகளின் தனித்துவ உலகத்தினுள் பெற்றோர் தலையீடு தவிர்க்கப் பட வேண்டும்.

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

இரண்டாவது காரணம் : இன்றைய சமூகத் தொடர்பு சாதனங்களால் குடும்ப வாழ்விற்குள் நுழையும் மூன்றாவது நபர்கள். வட்சப், முகநூல் மூலமாக நுழைகின்ற மூன்றாவது நபர் என்கின்ற 'பாம்பு' என்று ஏதேன் தோட்டத்தில் இருக்கும் குடும்ப வாழ்வை இன்று முற்றிலும் அழித்து விடுகின்றது. எனவே திருத்தந்தை நம்மை அழைத்துச் சென்று திருப்பாடல் 128 இல் குறிப்பிடுவது போல மாலை வேளையில் அமர்ந்திருக்கும் உணவருந்தும், செபிக்கும் குடும்பத்தை நமது குடும்பம் ஆக்குவோம். இந்த குடும்பத்தில் இருக்கும் தம்பதிகளுக்காக செபிப்போம். நல்ல கிறிஸ்தவ குடும்ப வாழ்வு மிளிர தம்பதிகள் வாழ்நாள் முழுவதும் நல்ல வாழ்க்கைத் தணையாக இருக்க மன்றாடுவோம்.

### தம்பதிகளின் சிந்தனைக்காக

'Fiddler on the roof என்ற ஆங்கில திரைப்படத்தில் வரும் அழகான நிகழ்வு இது. அழகான பாடல் வரிகளில் வரும் அன்பு பற்றிய ஓர் அழகான உரையாடல் இது. ரெவி என்கின்ற கணவன், மனைவி கோன்டே பார்த்துக் கேட்கின்றான் 'நீ என்னை அன்பு செய்கின்றாயா' 'நீ என்னை அன்பு செய்கின்றாயா'? என்று கேட்கும் கேள்வியானது ஓர் முட்டாள் தனமான கேள்வி என்று மனைவி நினைக்கின்றாள். நடக்கவிருக்கும் தங்கள் மகளின் திருமணம் காரணமாக அல்லது வாழ்வில் வரும் சலிப்பு காரணமாக அல்லது அன்று ஏற்பட்ட அஜீரணம் காரணமாக இந்தக் கேள்வி கணவன் மனதில் எழுந்திருக்கலாம் என்று மனைவி சிந்திக்கின்றாள்.

கணவன் 'நீ என்னை அன்பு செய்கின்றாயா?' என்கின்ற கேள்வியை மனைவியிடம் மீண்டும் கேட்கின்றான். மனைவி, கணவனைப் பார்த்து நி ஒரு முட்டாள் என்றாள். அதற்கு கணவன் நான் ஒரு முட்டாள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நீ என்னை அன்பு செய்கின்றாய்? என்று மீண்டும் கேட்டார். மீண்டும் கேட்டபடியால் மனைவி சொன்னாள். 'கடந்த 25 வருடங்களாக நான் உனக்காக உன்னுடைய உடுப்புக்களைத் தோய்த்து உள்ளேன். உனக்காக உணவைச் சமைத்துள்ளேன். உனக்காக வீட்டைத் துப்புரவு செய்துள்ளேன். உனக்காக பிள்ளைகளைப் பெற்று உள்ளேன். உனக்காக மாடுகளின் பால் கறந்து உள்ளேன். இப்போது 25 வருடங்களுக்குப் பின் என்னை அன்பு செய்கிறாயா? என்று நீ கேட்கிறாய்.

அதற்குக் கணவன் : அந்த வேளையில் கணவன் தாங்கள் முதன் முதலாக சந்தித்த நாளை நினைவுகூருகின்றான். அது அவர்களின் திருமண நாள் அப்போது அவர்களின் பெற்றோர் அவர்களுக்கு சொன்ன அறிவுரை 'நீங்கள் நாட்கள் செல்லச் செல்ல ஒருவரை ஒருவர் அன்பு செய்யப் பழகுவீர்கள். எனவே இப்போது கணவன் தாங்கள் ஒருவர் ஒருவரை அன்பு செய்வதில் எந்த அளவிற்கு முன்னேறியுள்ளனர் என்பதனை அறிய விரும்பினான். மனைவி திருமண வாழ்வின் தத்துவங்களை இவ்வாறு குறிப்பிடுகின்றார் ' 25 வருடங்கள் நான் அவருடன் வாழ்ந்துள்ளேன். சண்டை பிடித்துள்ளேன். உணவின்றி பட்டினி கிடந்துள்ளேன். 25 ஆண்டுகள் என் படுக்கையே அவருடையது. இது அன்பு இல்லையேல் வேறேது அன்பு. இதுவே என் கணவர் கேட்கும் அன்புக்கு அடையாளமாகும். இருவரும் பாடலை ஒருமித்து இவ்வாறு பாடினார்கள். இறுதியாக அன்பு என்றும் மாறாதது. 25 ஆண்டுகளின் பின்பும் அன்பு மாறாதது என்பதை அறிந்து கொள்வது ஓர் இனிமையான அனுபவமாகும்.

### மணமகள் தேவை

வயது : 38
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: G.C.E. A/L
தொழில் : விற்பனை முகாமையாளர்
(Blue Tec Holding PVT. LTD)
உதவி அரசாங்க பிரிவு : யாழ்ப்பாணம்
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
அரசாங்க அல்லது தனியார் வேலை

---

வயது :32
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: Diploma in Applied Banking and Finance
தொழில் : Working as Junior Executive Officer at Commercial Bank
உதவி அரசாங்க பிரிவு : வலி. தென்மேற்கு, சண்டிலிப்பாய்
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
பட்டதாரிப் பெண் (தொழிலுடன் கூடிய) நல்ல குணமுடைய கத்தோலிக்க சமயப் பெண்.

---

வயது : 45
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: G.C.E. A/L
தொழில் : வியாபாரம் (கடை)
உதவி அரசாங்க பிரிவு : யாழ்ப்பாணம்
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
றோமன் கத்தோலிக்கப் பெண்

---

வயது : 36
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: G.C.E. A/L (London University)
தொழில் : சுன்னாகம் Finace Company
உதவி அரசாங்க பிரிவு : பருத்தித்துறை
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
அரசாங்கவேலை (ஆசிரியர்), கத்தோலிக்க சமயம்.

---

வயது : 33
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: HNDM and BA
தொழில் : MPCS Branch Manager
உதவி அரசாங்க பிரிவு : கோப்பாய்
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
- அரசாங்க வேலை ( ஆசிரியர்)


---

வயது : 30
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: Bachelor Econoics
தொழில் : Disponent Gebauededienstleistung
நாடு : ஜேர்மனி
வாழ்க்கைத்துறை பற்றிய எதிர்பார்ப்பு:
படித்த ஆழமான கிறிஸ்தவ விசுவாசமுடைய பெண் ஜேர்மன், சுவிஸ்லாந்து பெண்

---

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் முகவரியில் தொடர்புகொள்ளவும் அகவொளி குடும்ப நல மையம் - புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இலக்கங்கள்: 077- 942 2970, 077- 904 7651 - 021- 222 2856**

# பருத்தித்துறை மறைக்கோட்டத்தினரின் வாழ்த்து



## எனது வாழ்வில் வயது, பதவி வேறுபாடற்ற குருத்தோழமையைப் கற்றுத் தந்த ஆசான்

பணிக் குருத்துவத்தில் பொன் விழாக்காணும் எமது ஆயரை எமது மறைக்கோட்டத்தில் பணியாற்று கின்ற குருக்கள், துறவிகள், இறை மக்கள் சார்பாக மனப்பூர்வமாக வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின் றோம்

ஆயர் அவர்கள் எனது வாழ்வில் வயது, பதவி வேறுபாடுகளற்ற குருத்தோழமையை கற்றுத் தந்த ஆசான். இவரது குருத்துவ அர்ப்பண வாழ்வு தூய ஆவி யின் கரம்பிடித்தலுடன் மேலும் மேலும் சிறந்தோங்க இறைமக்களுடன் இணைந்து நானும் செபிக்கின்றேன்.

1974 ஆம் ஆண்டு புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் ஆயர் அவர்களுடனான அறிமுகம் ஆரம்ப-மாகியது. ஆனால் எனது குருத்துவப் பயணத்தில் முதலா வது ஆண்டிலிருந்தே ஆயர் அவர்களுடன் நெருக்கமா-கப் பழகும் வாய்ப்பு கிட்டியது. இதற்காக இறைவனுக்கு நன்றி கூறி நிற்கின்றேன். 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மயிலிட்டி, ஊறணிப் பங்கில் அருட்தந்தை பீற் றர் துரைறட்ணம் அடிகளாருடன் உதவிப்பங்குத் தந்தை யாக இருந்தபோது அதே ஆண்டில் ஆனி மாதம்



ஊரே இடம்பெயர்ந்து இரவோடு இரவாக இளவாலை மண்ணில் தஞ்சம் புகுந்தோம். அக் காலப்பகுதியில் இளவாலையில் புனித ஹென்றி அரசர் கல்லூரியின் அதிபராகவும், மறைக்கோட்ட முதல்வராகவும் பணியாற் றியவர் நமது ஆயர் அவர்கள். அந்த நள்ளிரவு நேரத் திலேயே நாம் அனைவரும் தங்குவதற்குத் தனது கல்லூரியையும் ஆலயப் பங்கினையும் வழங்கி எமக்கு நம்பிக்கையூட்டி நின்ற தருணத்தை நெஞ்சார நினைத் துக் கொள்கின்றேன்.

இவர் குருவாக இருந்த காலப்பகுதியில் கல் வியை இறைபணிக்குரிய திறவுகோலாகக் கையாண்டு சாதி சமய வேறுபாடுகளின்றி மாணவர்களுக்கும் ஆசி ரியர்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் விழுமிய வழி-களைக் காட்டி நின்றார்.

வடமராட்சியிலே முற்காலத்தில் வதிரி திரு இருதயக் கல்லூரிக்கு மறுபடியும் ஒரு கத்தோலிக்க குருவானவரை இணைத்து தொலைந்து போன அந்தப் பாரம்பரியத்தை மீண் டும் கட்டியெழுப்பி யிருக்கின்றார். மேலும் எமது பகுதிக-ளில் ஆசிரிய வளம் எப்போதெல்லாம் குறைவாகக் காணப்படு கின்றதோ அப்போதெல்லாம் நாம் எழுதும் கடிதங்களுக்கு தனது முழு ஆதரவையும் வழங்கி உயர் அதிகாரிகளைச் சந்தி-த்து அவர்களிடமிருந்து தீர்வைப் பெற எமக்கு வழிசமைத்தவர்.

வடமராட்சிப் பிரதேச மக்களின் வாழ்வாதாரம் (மீன் பிடி) பாதிக்கப்படும்போதெல்லாம் மக்களுக்காகக் குரல் கொடுத்து 'தனக்குரிய பாணியில்' உரியவர்களின் கவனத்திற்குப் பிரச்சினைகளைக் கொண்டு சென்று சுமூகமான தீர்வுகளைப் பெற உறுதுணையாக இருந்தமையையும் நான் கண்கூடாகக் கண்டிருக்கின்றேன்.

மேலும் வடமராட்சியில் இவருடைய காலப்பகுதியில் ஆலயங்கள் பல மீள் எழுச்சி கண்டுள்ளன இன்னும் பல புதி-தாக எழிலுருக்கொண்டு எழுந்துள்ளன.

பலாலி ஆரோக்கிய மாதா ஆலயம், அதனோடு இணைந்த வளலாய் ஆயர் இல்லம், அதனுள் சிற்றாலயம், பருத்தித்துறைப் பங்கின் புனித லூர்து அன்னையின் திருத்-தலத்தில் நற்கருணைச் சிற்றாலயம், அச்சுவேலிப் பங்குடன் இணைந்திருந்த ஒட்டகப்புலப் பங்கு 2020ம் ஆண்டு ஆவணி

19ம் திகதி தனிப் பங்காக்கப்பட்டு ஊர் மக்களின் முழு ஒத்துழைப்புடன் ஒட்டகப்புலம் புனித அமல உற்பவ நாயகி ஆலயமும் வயாவிளான் புனித யாகப்பர் ஆலயம், புனித உத்தரிய மாதா ஆலயம் புணரமைக்கப்பட்டு வழிபாட்டிற்குப்





பயன்படுகின்றன. இவ் இடங்களில் குருமனை-களும் அமைக் கப்பட்டுள்ளன. கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயம், இவரது காலத்தில் புதிதாகத் தோற்றங் கொண்டெ-டழுந்த ஆலயக் கட்டுமானங்களாகும்.

மேலும் தாழையடி ஆலயப் புனரமைப்பு, அப் போஸ்தலிக்க கார்மேல் சபையினருக்கான ஒரு மடத்தை உரு வாக்க முன்னின்று உழைத்தவர். இவரது முயற்சியால் தென் இந்தியாவிற்குரிய லியோன் நகர புனித வளனார் சபை அருட் சகோதரிகளை 20.07.2017ம் ஆண்டு மணற்காட்டுப் பங்கி-ற்கு அழைத்து அவர்களுடைய பணியை ஆரம்பித்து வைத்தது இவரையே சாரும்.

செம்பியன்பற்று நாகர்கோயில் குடாரப்புப் பகுதிகளில் ஆலயங்களின் மீள் உருவாக்கம், பருத்தித்துறைப் பங்கில் புனித அந்தோனியார் ஆலயக் கட்டுமானங்களின் மீள் உருவாக்கம், தும்பளை புனித மரியன்னை ஆலய கட்டுமானப் பூர்த்திகள், மாத னைக் கிறிஸ்து அரசர் ஆலயத்திற்கான வேலைகளின் ஆரம்பத் திற்கும் துணை புரிந்துள்ளார்.

இவைமட்டுமன்றி தென்மராட்சிப் பிரதேசத் தில் சாவகச்சேரி புனித லிகோரியர் ஆலயம், மிருசு வில் புனித நீக்கிலார் ஆலயமும் பங்குப் பணிமனையும் பளை, முகமாலை ஆரோக்கிய அன்னை யாத்திரைஸ் தல மீளமைப்பு புலோப்பளை புனித பேதுருவானவர் ஆலய வேலைத்திட்ட ஆரம்பம், கச்சாய் புனித இரா யப்பர் ஆலயக் கட்டுமானங்களின் ஆரம்பம் அல்லாரை செபமாலை மாதா ஆலயக் கட்டுமானங்கள் என இவரது காலப் பகுதியில் பருத்தித்துறை மறைக்கோட்டத்திற்-குட்பட்ட தென்மராட்சிப் பிரதேசம் கண்ட கட்டுமானப் பணிகளாகும். அத்தோடு அன்பின் பணியாளர் சபை யினரால் மாற்றுத்திறனாளிகளுக்கான கல்விப் பணி யாற்றுவதற்கான கட்டுமானப் பணியின் ஆரம்பத் திட்டங்களும் இவரது காலத்தில் உருவான திட்டங்க-ளாகும்.

இவ்வாறாக இவருடைய காலத்தில் ஆன்மீகப் பணிகள் பல கோணங்களிலும் விரிவுபடுத்தப்பட்டு சிறப் புற்றிருக்கின் றன. இனி வரும் காலங்களிலும் இறை துணை யோடு இவர் பணிகள் சிறந் தோங்கவும் இறைகருணை யுடன் நீண்ட உடல் நலம் ஆன்மீக பலம் பெற்று இறைபணியாற்றும் கருவியாக இவரை இறைவன் வழிநடாத்த வேண்டும் என்றும் இறை மக்களோடு சேர்ந்து செபித்து வாழ்த்தி நிற்பதில் உள மகிழ்வெய்துகின்றேன்.

**அருட்திரு அ.பெ.பெனற் அடிகள்**
*மறைக்கோட்ட முதல்வர்*
*பருத்தித்துறை*

நன்றி: ஆயரின் பொன்விழா மலர்

## கிளிநொச்சி மறைக்கோட்டத்தில்

((5ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரோபணம் இளைஞர் இல்லம் எமது ஆயுரின் கண்கா ணிப்பில் 14.07.2020 அன்று இயக்குநரின் வதிவிட மும், மாணவர்களுக்கான மண்டபமும் புதிதாக நிர் மாணிக்கப்பட்டது அத்தோடு கணனிக்கூடமும், வகுப் பறை கட்டடத் தொகுதிகளும் புனரமைக்கப்பட்டு 14.07.2020 திறந்து வைக்கப்பட்டது. மேலும் 04.05.2023 அன்று மாணவர்களுக்கான கல்விக் கூடம் புனரமைப்பு செய்யப்பட்டது. மாணவர்களின் வருவாய்க்காக பொச் சுத் தொழிற்சாலை 20.06.2021 அன்று உருவாக்கப்பட்டது.

பரந்தன் பங்கில் மாணவர்களின் மறைய றிவை வளர்க்கும் அவசியத் தேவையை அறிந்தவராக 2023 ஆம் ஆண்டு மறைப்பாடசலையை அமைப்ப-தற்கு அனுமதி தந்து வழிகாட்டி நின்றார்.

கரித்தாஸ் வன்னி கியூடெக் மூலம் கிராஞ்சியில் 03.07.2022 ஆம் ஆண்டு புனித அந்தோனியார் அற நெறிப் பாடசாலை புதிதாகக் கட்டி திறந்து வைக்கப்பட்டது.

மேய்ப்புப் பணிகளில் நல் மேய்ப்பனாக கிளி நொச்சி பரந்தன் பங்குப் பணிமனையை ஆயர் அவர் களே முழு செலவையும் பொறுப்பேற்று 2020 மார்ச் மாதத்தில் கட்டிமுடித்துள்ளார். கொரோனா தாக்கத்தால் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக 2020ம் ஆண்டு செப்-ரெம்பர் 03ம் திகதி ஆயர் அவர்களால் ஆசீர்வதிக்கப் பட்டு பங்குப்பணிமனை திறந்து வைக்கப்பட்டது.

உருத்திரபுரம் பங்குப் பணிமனை புனரமைப்பு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. வட்டக்கச்சி பங்கு பணி-மனை ஆயருடைய நிதிப்பங்களிப்புடன் புனரமைப்பு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு திறந்து வைக்கப் பட்டது. கிளிநொச்சி மறைக்கோட்டத்தில் இருக்கின்ற பங்குகளிலும் நிறுவனங்களிலும் சமூகத்திலும்காலத்-தின் தேவைக்கேற்ப பணியாற்றி மந்தைகளின் மனங் களில் இடம்பிடித்த எம் ஆயனே! உம் பணி தொடர அன்னை மரியின் வழியில் சிறப்புடன பணியாற்ற செபங்களுடன் கூடிய நல்வாழ்த்துக்கள்.

# முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் ஆயர் அவர்களின் பணிப்பதிவுகள்

ஆழிப்பேரலையால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்ட மிகப்பெரும் சோகம் ஆறுவதற்குள் போரின் உயிர் இழப்புக்களும் உடமை இழப்புக்களும் மக்களை நிலை குலையச் செய்தது. குறிப்பாக முள்ளிவாய்க்காலில் ஆயிரக் கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டு மேலும் ஆயிரக் கணக்கான மக்கள் நிர்க்கதியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இச்சூழலில் இம்மக்களின் துயர்துடைக்கும் பணிகளை மிகவும் கரிசனையுடன் எமது ஆயர் ஆன்மீக, கல்வி, சமூகப்பணியில் அக்கறையுடன் தொடர்ந்து ஈடுபடுகிறார்.



### *முல்லைத்தீவு*

ஆயருடைய காலத்தில் மக்களின் ஒத்துழைப்புடன் புதிய பங்குப் பணிமனை திறந்து வைக்கப்பட்டது. சுனாமிப் பேரலையால் பழமை வாய்ந்த கப்பலேந்தி மாதா ஆலயம் முழு மையாக அழிந்த வேளையில் புதிதாகக் கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. 15.08.2023 மேற்படி ஆலயத்தின் 125 ஆம் ஆண்டு யூபிலி விழாவும் ஆயர் தலைமையில் திருப்பலியும் இடம்பெற்று கொண்டாடப்பட்டன.

திருந்தந்தையின் தூதுவர் யாழ் மறை மாவட்டத்திற்கு வருகை தந்த வேளை ஆயர் அவரை முள்ளிவாய்க்காலிற்கு அழைத்து வந்து யுத்தவடுக்களைக் காண்பித்து மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன் அவர்களுக்காகச் செபித்தார்.

### புதுக்குடியிருப்பு குழந்தை இயேசு

மேற்படி ஆலயம் 19.08.2017ல் ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 05.06.2018 அன்று. பங்கு மக்களின் சமூக முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு புதிய மண்டபம் ஆயரின் நிதிப்பங்களிப்புடன் 06.02.2020 இல் திறந்து வைக் கப்பட்டது. புனித சூசையப்பர் ஆலயம் முன்னாள் ஆயர் அவர் களால் அடிக்கல் நாட்டப்பட்டு 21.01.2023 அன்று ஆயர் அவர் களால் திறந்து வைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு றோ.க வித்தியாலயம் 2017 இல் ஆயர் அவர்களின் விஷேட முயற்சியால் பாடசா லைக்கு அருட்பணி அ. றொபின்சன் யோசவ் முதல் வராக நியமிக்கப்பட்டு தொடர்ந்து கட்டட அதிகரிப்பு, பரீட்சைச் சித்திகளின் அதிகரிப்பும், ஆன்மீக, ஒழுக்க வளர்ச்சியும், பாடசாலைக்கான மாணவர் விடுதி ஒன்றும் கட்டப்பட்டு ஆயர் அவர்களால் 16.01.2023 இல் திறந்து வைக்கப்பட்டது.

தர்மபுரம் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத் தில் புதிதாக அமைக்கப்பட்ட பங்குப் பணிமனை 25.09.2023 அன்று ஆயர் அவர்களால் திறந்து வைக் கப்பட்டது. மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக புனித பேதுருவானவர் முன்பள்ளியும் 12.02.2024 அன்று ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தர்மபுரம் பங்கில் பணியாற்றுவதற்காக வியாகுல அன்னைமரி ஊழியர் சபை அருட்சகோதரிகள் அழைக் கப்பட்டு 12.02.2024 அன்று விசுவமடு றெட்பானா வில் அருட்சகோதரிகளுக்கான மடத்திற்குரிய அடிக்கல் நாட்டப்பட்டு கட்டட வேலைகள் நடைபெறுகின்றன.

நன்றி: ஆயரின் பொன்விழா மலர்

# பணிக்குருத்துவத்தில் பொன்விழாக் காணும் யாழ் மறை மாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை

யாழ் மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்ஆண்டகைதனது பணிக் குருத்துவத்தின் பொன் விழாவில் பாதம் பதிக்கும் நன்நாள் இன்றாகும். ஆயர் அவர்கள் யாழ் மாவட்டம் கரம்பொனில் தங்கமலர் ஞானப்பிரகாசம் தம்பதியினருக்கு அருமைப் புத்திரனாகப் பிறந்து தனது ஆரம்பக் கல்வியை யாழ். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்று இறைவனின் அழைப்பின் குரலுக்குச் செவிமடுத்து, புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தில் இணைந்து தனது மெய்யியல் கல்வியை அம்பிட்டிய தேசிய குருமடத்திலும், இறையியல் கல்வியை இந்தியாவில் உள்ள பூனாய் திருத்தந்தையின் குருமடத்திலும் கற்று 1974 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 24ம் நாள் அன்றைய யாழ் ஆயர் பேரருட் கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் பணிக்குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மறைத்தளங்களில் பங்குக் குருவாகப் பணியாற்றிய ஆயர் அவர்கள் லண்டன் பல்கலைக்கழகத்தில் இறையியலில் முதுகலைமாணிப் பட்டத்தினையும், லண்டன் பல்கலைக் கழகத்தில் கல்வியியலில் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றார்.

இவரது பணிபன்முகப் பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ ஒழுக்காற்று சபைத் தலைவராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத் துறை விரிவுரையாளராகவும், யாழ். புனித சவேரியார் குருமட விரிவுரையாளராகவும் பணியாற்றிய ஆயர், யாழ். புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபராகவும், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்று யாழ். மறைமாவட்டக் குருமுதல்வராக அமர்ந்தவேளை, 2015 ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்ட ஆயராகத் திருப்பொழிவு பெற்றார்.

ஆயர் ஆண்டகை அவர்கள் பன்முக ஆளுமை கொண்ட ஒருவராக நம் மத்தியில் வலம் வருகின்றார். இவரிடத்தில் காணப்படுகின்ற பண்புகளில் யாருக்கும் தலைவணங்காத் தலைமைத்துவப் பண்பு தனியிடம் பெறுகின்றது. ஆயர் அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்திலும், புகழ் பூத்த கல்லூரிகளிலும் விரிவுரையாளராகவும் மற்றும் அதிபராகவும் பணியாற்றிய வேளையில் அவரின் தலைமைத்துவப் பண்பு கல்விப் புலம் சார்ந்த அனைவரையும் வியக்க வைத்துள்ளது.

ஆயர் அவர்கள் கல்வியைக் கண்ணாகக் கருதியவர். இதனால் வடபுலக் கல்வி ஆளுமைகள் மத்தியில் தனக்கென தனித்துவமானமுத்திரையைப்பதித்துக்கொண்டார். இலங்கையின் கல்விக் கொள்கை இலக்கின்றிப் பயணிப்பதை கண்ணுற்று இளம் சந்ததியினருக்கு இருள் சூழும் அபாயம் இருப்பதைத் தூரநோக்குடன் சிந்தித்து, மூன்றாம் நிலைக் கல்விக்கு அத்திவாரம் இட்டு, பல தொழிற் கல்விக் கூடங்கள் எழுவதற்கு வழியமைத்தார். கட்டாயக் கல்வியுடன் சர்வதேச கல்வியையும் வருங்கால சந்ததி வளமாகப் பெற்றிட மொன்பேட் சர்வதேச பாடசாலை அல்லைப்பிட்டியில் அமைய மொன்போட் அருட்சகோதரர்களை வரவழைத்து ஊக்கமளித்தார்.

இறையியல் கல்வியைக் குருக்கள் மாத்திரம் கற்கும் நிலையை மாற்றிப் பொது நிலையினரும் அக்கல்வியைக் கற்க புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் அமைத்தார். உளவியல் கல்விக்கு உருக்கொடுக்க அகவொளி நிறுவகத்தின் சேவையை பன்முகப்படுத்தினார்.

ஆயர் அவர்கள் குருவாகவும், குரு முதல்வராகவும், ஆயராகவும் இருந்த காலப் பகுதி தமிழர் தம் வாழ்வில் போர் மேகம் சூழ்ந்த இருள் மயமான காலமாகும். இக் காலப்பகுதியில் அநீதிக்கெதிராக குரல் கொடுத்து நமது தேசத்தில் சமாதானம் நிலவக் கடினமாக உழைத்தார். இதன் மூலம் தமிழர்களின் தலைநிமிர்விற்கு நீதியின் வழியில் நின்று உழைத்தவர்களாக விரல் விட்டு எண்ணக் கூடியவர்களுள் குரல் விட்டுச் சொல்லக் கூடியவராக ஆயர் விளங்குகின்றார்.

ஆன்மீகவாதிகள், அரசியல் வாதிகள், சர்வதேச அரசியல் தலைவர்கள், இராஜதந்திரிகள் மற்றும் பிரமுகர்கள் ஆயர் இல்லம் நாடி வந்து ஆயரிடம் கலந்துரையாடி ஆலோசனைகள் பெற்றுச் செல்வதையும் அதனைச் செயற்படுத்துபவதையும் வரலாற்று ஓட்டத்தில் எம்மால் தரிசிக்க முடிகின்றது. இது ஆயர் அவர்களின் ஆன்மீகம், கல்விசார், அறிவியல் மற்றும் அரசியல் தளங்களில் அவர் கொண்டுள்ள ஆழ்ந்த புலமையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

மக்களின் சுதந்திரமான வாழ்விற்கு அடிப்படையாக விளங்குவது ஊடக சுதந்திரமாகும். காலத்தின் தேவை உணர்ந்து கத்தோலிக்க ஊடக மையமாக மறைநதியை உருவாக்கி, மறை அலை தொலைக்காட்சி சேவை மூலம் மறை மாவட்ட நிகழ்வுகள் அனைவராலும் அறியப்பட வழி சமைத்தார். அத்துடன் ஏனைய அச்சகங்களுக்கு நிகராக யாழ்ப்பாணத்தின் மிகப் பழம்பெரும் அச்சகமான கத்தோலிக்க அச்சகத்தை நவீனமயப்படுத்தி இலங்கையின் ஆரம்பகால தமிழ் கத்தோலிக்கப் பத்திரிகையான பாதுகாவலன் பத்திரிகையின் வளர்ச்சிக்கும் அரும் பணியாற்றி வருகின்றார்.

ஆயர் அவர்கள் யாழ் மறைமாவட்ட குருக்கள் மற்றும் துறவிகளின் இளைப்பாறுதல் காலப் பராமரிப்புக்கென நல்லாயன் நிதியத்தினை நிறுவி, அவர் தம் நலன்களில் அதீத அக்கறை எடுத்து வருவதனைக் காண முடிகின்றது.

முப்பணிகளால் முழுமையானவர் என ஆயர் அவர்கள் போற்றப்படுகின் றார். கல்விப் பணி, குருத்துவப்பணி, ஆயத்துவப் பணி என முப்பரிமாணம் கொள்ளும் அவரது பணிகள் அவரை முழுமனிதனாக எம் கண் முன் நிலை நிறுத்தியுள்ளது.

**'வல்லவர்கள் வேண்டாம் நல்லவர்கள் வேண்டும்'** என்ற விருது வாக்குடன் பணிக் குருத்துவத்தையும், ஆயத்துவத் தையும் அலங்கரிக்கும் எம் ஆயர் தமிழ் மக்களுக்கு நல்லாயனாக இருந்து ஆற்றி வரும் பணிகள் போற்றுதலுக்குரியவை;பாராட்டுக்குரியவை; நன்றிக்குரியவை.

"நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ள வில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும் அக்கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தி னேன்" (யோவான் 15:16) என்ற இறைமகன் இயேசுவின் இறைவாக்கு ஆயரில் நிறைவு பெறுவதை இறைமக்களாகிய நாம் கண்டு மகிழ்வடைகின்றோம். மரியன்னை மீது மிகுந்த பக்தி கொண்டு அவரைத் தனது தாயாகப் போற்றி வரும் ஆயர் உண்மையில் பேறுபெற்றவர் என்று தான் கூறவேண்டும். ஏனெனில் மருதமடு அன்னை முதற் தடவையாக 1974 ஆம் ஆண்டு யாழ் மண்ணிற்கு வருகை தந்த காலப்பகுதியில் ஆயர் அவர்கள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இன்று மருதமடு அன்னை இரண்டாம் தடவை யாழ் மண்ணிற்கு வருகை தந்திருக்கும்போது ஆயர் அவர்கள் தனது குருத்துவப் பொன் விழாவினைக் காண்கின்றார்.

மரியன்னை வழி இறையருள் பெற்று பேரருட் திருவாக எமது ஆயர் ஆண்டகை என்றும் நலன்களுடன் வாழ்ந்திட எம் செபங்களும் வாழ்த்துக்களும் தொடரும்..

**அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்**
**ஆசிரியர்-பாதுகாவலன்**

# இளவாலை ஹென்றியரசர் கல்லூரியில் ஆயரின் பணிகள்

இளவாலைப் பதியிலே இளமைத் துடிப்புடன் 25 ஆண்டுகள் இம்மண்ணிலே பணியாற்றிய பேரருட்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை அவர்களின் குருத்துவ திருநிலைப்படுத்தலின் ஐம்பதாவது ஆண்டு பொன்விழா நிறைவை மகிழ் வுடன் நினைவுகூரும் வேளையில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிச் சமூகம் சார்பாக இதயம் நிறைந்த வாழ்த்தினையும் இறைதந்தைக்கு நன்றியின் புகழையும் சாற்றுகின்றேன்.

உயர்ந்த உருவம், கம்பீர நடை, சிரித்த முகம், கனிவான பார்வை, அன்பான பேச்சு, கடமையில் கவனம், சிறந்த நிர்வாகம், தூர நோக்கு, துணிவான செயல்முறை, அனைவரையும் ஆட் கொள்ளும் சுபாவம் எனப் பன்முக ஆளுமை கொண்ட ஒருவராக விளங்குவதே இவரது பணியிடை வெற்றியின் இரகசியம் ஆகும்.

குருவாகத் தனது குருத்துவப் பணிவாழ்விலே 50 ஆண்டுகள் நிறைவு செய்துள்ள இவ்வேளையில் குருத்துவப் பணிவாழ்வில் பெரும் பகுதியை கல்விப் பணியிலேயே குறிப்பாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும், பத்திரிசியார் கல்லூரியிலும் ஆற்றி 2001ம் ஆண்டு கல்விப பணியின் 25 ஆண்டுகளை இள வாலை மண்ணிலே நிறைவு செய்தவர். அந்த வகையில் இவரது பணிக் காலத்தில் புனித ஹென்றியரசர் கல்விச் சமூகம் கண்டு கொண்ட வளர்ச்சிப்படிகள் இன்றும் வரலாற்றில் நிலைத்து நிற்பதாகப் பார்க்கப்படுகிறது.

1976 - 1989 எமது கல்லூரியின் உப அதிபராகவும் 1989 - 2002 வரை அதிபராகவும் பணியாற்றிய இக்காலத்தில் 1991ம் ஆண்டு இலங்கை அதிபர் சேவையின் 1ம் தரத்தைப் பெற்று 1990 1994 வரையான காலப் பகுதியில் இளவாலை மண்ணின் 12 அரச பாடசாலைகளின் கொத்தணி அதிபராகப் பணியாற்றினார். உப அதிபர், அதிபராகப் பணியாற்றிய காலப்பகுதியில் வலிகாமப் பகுதியில் போர்க்கால சூழலின் கெடுபிடிகளும் இராணுவப் படையினரின் போர்க்கால இறுக்கமான சூழ் நிலைகளில் புனித ஹென்றியரசர் கல்லூரியின் போர்க்கால இடப் பெயர்வுகளுக்குள் இவரது கல்விப் பணியின் பல் பரிமாணங்களை இளவாலை மண்ணும் கல்விச் சமூகமும் பெற்றுக் கொண்டது.

1994 - 2002 இதே காலப் பகுதியில் இளவாலை மறைக் கோட்டத்தின்12பங்குகளின்முதல்வராகவும்பணியாற்றியகாலத்தில் போர் காலசூழலின்கெடுபிடிகளின்மத்தியில்வலிகாமப்பகுதியில் உள்ள அனைத்து ஆலயங்களினது உடைமைகளையும் புனிதத்துவத்தையும் பேணுவதில் துணிவுடன் செயற்பட்டார்.

இளவாலை இவரைப் புடமிட்டது, இளவாலையை இவர் புடமிட்டார் என்று சொல்வதே பொருத் தமானதாக அமையும். இளவாலை மண்ணிலே இவரது பணியானது வலிகாமப் பகுதியின் போர்க்கால சூழலின் கெடுபிடிகளின் மத்தியில் அமைந்தமையால் இவரால் இளவாலை மண் பெற்ற நன்மைத் தனங்கள் ஏராளம். இன்றும் வலிகாமப் பகுதியில் போர்கா-




லச் சூழலில் இவர் ஆற்றிய சமூகப் பணி பசுமரத்தாணியாய் மக்கள் மனங்களில் நிலைத்து நிற்பதனை அனுபவப் பகிர்வின் வாயிலாகக் காண முடிகின்றது.

மேலும், ஐம்பதாண்டு கால பரமனின் சேவைதனில் முப்பதாண்டு காலப் பணியினை கல்விப் பணியிலேயே தம்மை பரிணமித்துக் கொண்டார். அவ் வகையில் புனித ஹென்றியரசர் கல்லூரி கல்விச் சமூகத்தின் வரலாற்றில் தவிர்க்க முடியாததும், மறந்து விட முடியாததுமான சேவை ஆற்றினார் என்று கூற முடியும். இவரது பணியினால் கல்லூரியானது பல மைல் கற்களைத் தொட்டது எனலாம்.

இவரால் உருவாக்கப்பட்ட இவர் வழித்தோன்றல்கள் இன்றும் இளவாலையிலும் உலகின் பல இடங்களிலும் பாங்குடன் செய்நன்றி மறவாது தாம் வாழ்ந்த மண்ணிற்கும் கல்லூரித் தாய்க்கும் தம்மை அவையத்தில் முந்தியிருப்ப செய்த அதிபர் தந்தைக்கும் இன்றும் இன்முகத்துடன் நன்றி யுணர்வை வெளிப்படுத்துகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இளவாலை மண்ணின் ஒவ்வொரு குடிமகனையும் மண்ணின் தன்மையையும் மிகவே அறிந்த ஒருவராக காணப்படும் நம் ஆயர் இளவாலை மண்ணின் மைந்தர் என அழைக்கப்படத் தகுதியுடையவரே.

இவர் ஆயராகப் பொறுப்பேற்றவுடன் முதல் செயற்பாடாக மேய்ப்புப்பணி மகாநாடு வழியாக இறை மக்களின் ஆன்மீக வாழ்வின் குறை நிறைகளை ஆராய்ந்து விசுவாச வளர்ச்சிக்குத் தடையானவற்றை அகற்றி சாட்சிய வாழ்வு வாழ வழிகாட்டினார்.

போர்க்காலத்தில் ஆலயங்கள் மற்றும் பங்குப் பணிமனைகள் முதியோர் இல்லங்களைப் புனரமைத்துப் புதுப்பொலிவுடன் காண காரணமானார்.மறை மாவட்டத்தின் சில பிரதேசங்களின் ஆன்மீகத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு புதிய பங்குத்தளங்களை உருவாக்கி ஆன்மீக வறட்சிக்கு நீர் பாய்ச்சினார், தமிழின அடக்குமுறைகள், அநீதிகளைக் காலத்துக்குக் காலம் அரசியல் ஆட்சியாளர்களுக்கு உணர்த்தும் ஆயனாக பொறுப்பு வாய்ந்த கடமையை ஆற்றுகின்றார்.

மறைமாவட்டத்தின் சில பிரதேசங்களின் ஆன்மீகத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு புதிய பங்குத்தளங்களை உருவாக்கி ஆன்மீக வறட்சிக்கு நீர் பாய்ச்சினார், தமிழின அடக்குமுறைகள், அநீதிகளைக் காலத்துக்குக் காலம் அரசியல் ஆட்சியாளர் களுக்கு உணர்த்தும் ஆயனாக பொறுப்பு வாய்ந்த கடமையை ஆற்றுகின்றார்.

**வண.பிதா. ஆ. மைக் மயூரன்**
*அதிபர்*
*புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.*

நன்றி: ஆயரின் பொன்விழா மலர்

நீங்கா நினைவில் 9ம் ஆண்டு | நீங்கா நினைவில் 27ம் ஆண்டு





பிறப்பு 12 . 12 . 1953

அமரர் மோஸஸ் ஜெயராஜா

இறப்பு 04 . 04 . 2015

பிறப்பு 03 . 17 . 1922

அமரர் J.D. மோஸஸ்

இறப்பு 16 . 08 . 1997

"நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டு நலமாக வாழ்வை முடித்துக்கொண்ட சகோதரர்களே விண்ணிலும் நலமாக வாழுங்கள்"

நினைவுகளுடன்
உறவுகள்

AD-23

நீங்கா நினைவில் 1ம் ஆண்டு

பிறப்பு 27 . 09 . 1964



இறப்பு 27 . 04 . 2023

அமரர்

அன்ரன் சேவியர் வில்பிறட் மேரி(லதா)

எம் வாழ்வின் சூரியனாகவும், தொலை தூரச் சந்திரனாகவும்,
எம்மைத் தாங்கும் சுமைதாங்கியாகவும், எம்மை வழிநடத்தும்
ஆசானாகவும், தன்னிகரில்லாத் தாயாகவும், எமக்கு வாழ்வழித்த
தெய்வமாகவும் வாழ்ந்த எமது மூத்த சகோதரீயே!
உங்கள் ஆன்மா இறைவனில் இளைப்பாறத் தினம் மன்றாடுகின்றோம்.

பிரிவால் துயருறும்
சகோதரர், சகோதரிகள், உறவுகள்.

372கடற்கரை வீதி, நாவாந்துறை.

AD-2

கண்ணீர் அஞ்சலி



அமரர். J. பாலேந்திரன்
(பாலா)

பிறப்பு 30 . 04 . 1948

இறப்பு 22 . 04 . 2024

எம் கத்தோலிக்க அச்சகத்தில்
பல ஆண்டுகளாகப் பணி செய்து அமரத்துவம் அடைந்த
J. பாலேந்திரன் (பாலா) அவர்களின் வாழ்வுக்காக
இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.
அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற
மன்றாடுவதுடன், ஆழ் துயர் கொண்டுள்ள
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமையாளர், பணியாளர்கள்

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்


# பாத்திமா அன்னையின் காட்சிகள் மற்றும் சிறப்புகள்

மாசற்ற முறையில் கருவிலே உருவாகி, மனுமகனைப் பெற்றபோதும் தம் கன்னிமையில் கிஞ்சித்தும் குன்றா காரிகையவள்! விண்ணையும், மண்ணையும் இணைக்கும் பாலமாக அன்பிலே விளைந்த ஆரமுதாக அவனிக்கு வந்த காரிகையவள்! அன்பையே உயிர்நாடியாகக் கொண்டவள்.

மனிதகுலம் அழிவுப்பாதைக்குச் செல்லும் போதெல்லாம் மக்களை எச்சரிக்கவும், நல்வழிப்படுத்தவும், உலகின் பல்வேறு இடங்களில் காட்சியளித்த நம் அன்னை அவர்கள், போர்த்துக்கல்லில் உள்ள பாத்திமா நகரில் மட்டும் 6 முறை காட்சியளித்துள்ளார்.

### காட்சிகாணப் பேறுபெற்றவர்கள்.

பாத்திமா ஊரைச் சேர்ந்த அல்புஸ்திரல் என்ற சிற்றூரில் வசித்த லூசியா, பிரான்ஸிஸ், ஜெசிந்தா என்னும் சிறார்களுக்கு அன்னையின் காட்சியினைக் காணும் பெரும் பேறு கிடைத்தது. அன்னை மூவருக்கும் காட்சி அளித்தபோது, மூவரும் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தொடக்கக் காட்சிகள்

லூசியாவும், தோழிகளும் ஆடு மேய்த்துவிட்டு மதிய உணவு உண்டுவிட்டு வழக்கம் போல ஜெபமாலை ஜெபித்துக் கொண்டிருக்கும்போது முதன் முறையாக வெள்ளை நிறத் தோற்றம் உயரத்தில் நிற்பதைப் பார்த்துத் திகைப்படைந்தனர். அந்தத் தோற்றம் உண்மையா இல்லையா என்று உணரும் முன்னரே மறைந்து போனதைப் பார்த்து மனக்குழப்பமடைந்தனர்.

இதேபோன்ற காட்சியை லூசியா மூன்று முறை கண்டு, பெற்றோரிடமும் ஊர் மக்களிடமும் தெரிவித்தாள். ஆனால் அவளை யாரும் நம்பவில்லை. மாறாக ஏளனம் செய்தனர்.

நான் சமாதானத்தின் தூதன் என்று உரைத்த வானதூதுவன் லூசியா, ஜெசிந்தா, பிரான்சிஸ் மூவரும் சுபேசாவுக்கு அருகில் உள்ள கௌசாவெல்லா என்ற இடத்தில் ஆடுகள் மேய்த்துக் கொண்டிருந்தபோது அவர்களுக்குக் காட்சியளித்தார்.

போர்ச்சுக்கல் நாடு 1916 ஆம் ஆண்டு முதல் உலகப் போரினால் நிகழ்ந்த துன்பத்தில் இருந்த காலகட்டம் அது. சிறார்களுக்குக் காட்சியளித்து அவர் " எம் தேவனே! உம்மை விசுவசிக்கிறேன். உம்மை அன்பு செய்கிறேன். உம்மை விசுவசிக்காமல் இருப்பவர்களுக்காகவும், உம்மை அன்பு செய்யாமல் இருப்பவர்களுக்காகவும் மன்னிப்புக் கேட்கிறேன்" என்று மூன்று முறை ஜெபித்தார். இந்த செபத்தைச் சிறார்களிடம் கூறி செபிக்கவும் வைத்தார்.



இதேபோன்று மேலும் இரண்டு முறை சிறுவர்களுக்குக் காட்சியளித்த வானதூதர் செபங்களையும், ஒறுத்தல் முயற்சிகளையும் கடவுளுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் என்றும், பாவிகள் மனம் திரும்ப வேண்டும் என்றும் செபிக்கும்படியும் வேண்டுகோள் விடுத்துவிட்டு மறைந்தார்.

எண்ணற்ற துன்பங்களை ஜெசிந்தாவின் குடும்பங்கள் சந்திக்க நேரிட்டாலும் ஆண்டவர் அனுப்பும் துன்பங்களை அமைதியான மனதுடன் ஏற்றுக்கொள்வோம் என்ற வானதூதரின் வார்த்தைகளை ஏற்றுத் துன்பங்களை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்து மகிழ்ந்தனர்.

# வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்ட யாழ் ஆயரின் பணிக்குருத்துவப் பொன்விழா






யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தமது பணிக் குருத்துவப் பொன்விழாவைக் கடந்த ஏப்ரல் மாதம் 24ம் திகதி கொண்டாடி மகிழ்ந்தார். ஆயர் அவர்களின் நன்றித்திருப்பலியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகை அவர்களும், கொழும்பு உயர் மறைமா வட்டத் துணை ஆயர் பேரருட் திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்களும், Monsignor கமிலஸ் நிமலன் அடிகளும், துறவற சபைகளின் முதல்வர்கள், குருக்கள் துறவிகள் இறை மக்களெனப் பலர் பங்கேற்றனர்.

இத்திருப்பலியில் துணை ஆயர் பேரருட்திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் மறையுரையாற்றினார். இத்திருப்பலிக்குப் பொன் விழா நாயகன் யாழ். ஆயர் அவர்கள் பிரதான வீதியிலிருந்து குருக்கள் துறவிகள் புடைசூழ வாத்திய இசை வரவேற்புடன் யாழ். பேராலயம் அழைத்து வரப்பட்டார். நன்றித்திருப்பலியைத் தொடர்ந்து ஆயர் அவர்களுக்கு பாராட்டுப் நிகழ்வு ஒன்றும் பேராலய வளாகத்தில் நடத்தப்பட்டது. இந் நிகழ்வில் ஆறு மறைக்கோட்டத்திலிருந்தும் அரங்க ஆற்றுகைகள் வழங்கப்பட்டன. ஆயர் அவர்களை வாழ்த்தி யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் சிறி சற்குணராஜா அவர்களும், பொது நிலையினர் சார்பாக திரு. கில்பேட் குணம் அவர்களும் சிறப்புரைகளாற்றினர்.

இப் பாராட்டு நிகழ்வுகளின் சிகரமாக ஆயர் அவர்களின் பொன் விழா மலரானது அருட்பணி ம. ஜெறோ செல்வநாயகம் அடிகளாரால் வெளியிட்டு வைக்கப்பட்டது. அன்றைய தினம் தபால் திணைக்களத்தினால் ஆயர் அவர்களுக்காக வெளியிடப்பட்ட தபால் முத்திரையும் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநர், அரச, அரச சார்பற்ற உயர் நிலை அதிகாரிகள், மருத்துவர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## இரு புதிய குருக்களின் முதல் நன்றித் திருப்பலி




அருட்தந்தை யே. அன்ரன் கஜீஸ்காந் தனது முதல் நன்றித் திருப்பலியை கடந்த 14.04.2024 அன்று காலை 10.30 மணியளவில் எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தில் விண்ணகத்தந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்.

இத்திருப்பலியானது எழுவைதீவுப் பங்குத்தந்தை, அருட்தந்தை யூட் கமில்டன் தலைமையில், பங்கு மக்களின் ஒத்துழைப்புடனும் சிறப்பாக இடம்பெற்றது. இத் திருப்பிலியில் பல அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் இணைந்து செபித்து நின்றார்கள்.

அருட்தந்தை பீ. அ. கமல்ராஜ் தனது முதல் நன்றித் திருப்பலியை கடந்த 14.04.2024 அன்று காலை 9.00 மணியளவில் மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் விண்ணகத் தந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்.

இத்திருப்பலியானது மாதகல் பங்குத் தந்தை தலைமையில், பங்கு மக்களின் ஒத்துழைப்புடனும் சிறப்பாக இடம் பெற்றது. இத் திருப்பிலியில் பல அருட் தந்தையர்களும், அருட்சகோதரிகளும் இணைந்து செபித்து நின்றார்கள்.

## சவேரியார் குருத்துவக் கல்லூரியில் தமிழ் விழா





கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி தனிநாயகம் தமிழ் மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் விழா கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்தந்தை கிருபாகரன் அவர்களின் வழிநடத்தலில் மன்றக் காப்பாளர் அருட்தந்தை நெவின்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் குருமட வெளியரங்கில் இந்நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் அமரர் அருட் தந்தை தனிநாயகம் அடிகளின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஒளியேற்றப்பட்டது.

தொடர்ந்து தமிழ்விழா நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டதுடன் இவ்விழாவின் சிறப்பு நிகழ்வாக திரு. அன்று யூலியஸ் அவர்களின் நெறியாள்கையில் சவுலின் மனமாற்றத்தைச் சித்தரிக்கும் சங்க நாதம் நாட்டுக்கூத்தும் அருட்சகோதரர்களால் ஆற்றுகை செய்யப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அருட்தந்தை பிலேந்திரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் அமலமரித்தியாகிகள் யாழ். மாகாண முதல்வர் அருட் தந்தை ஜெயந்தன் பச்சேக் அடிகள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

## வெண்புரவி நகருக்கு புதியதோர் கேட்போர் கூடம்




அல்லைப்பிட்டி வெண்புரவிநகர் மக்களின் பன்முக, சமூக வளர்ச்சிக்காக மண்கும்பான் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த கேட்போர் கூடத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அக்கட்டடத் திறப்பு விழா கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது.

வெண்புரவி நகர் நிறுவுனர் அருட்தந்தை அமிர்த ஜெயசேகரம் அடிகளின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை கலந்து புதிய கட்டடத்தை ஆசீர்வதித்துத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மக்கள் கலந்துகொண்டனர்.

## ஆசிய ஆயர் பேரவையின் ஏற்பாட்டில் பிலிப்பைன்ஸில் சூழலியல் மாநாடு




ஆசிய ஆயர் பேரவையின் காலநிலை மாற்றத்திற்கான அவையத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட சூழலியல் மாநாடு கடந்த 11ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை பிலிப்பைன்ஸ் நாட்டின் தகாய்தே நகரத்தில் நடைபெற்றது.

இயற்கை அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தும் காலநிலை மாற்றத்திற்கு ஈடுகொடுக்கும் சிறு குழுமங்களை உருவாக்குவோம் என்னும் கருப்பொருளில் நடைபெற்ற இம்மாநாட்டில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ், நேபாளம், பிலிப்பைன்ஸ், ஜப்பான், வியட்னாம், மலேசியா, இந்தோனேசியா, மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய 12 நாடுகளைச் சேர்ந்த 38 வரையான ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் பங்குபற்றியதுடன் இலங்கையிலிருந்து யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் மற்றும் இலங்கை கரித்தாஸ் செடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை லூக் நெல்சன் பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில் மறைமாவட்ட ரீதியாக சுற்றுச்சூழல் மேம்பாட்டு ஆணைக்குழுக்களை உருவாக்குதல், பங்கு ரீதியாக சுற்றுச்சூழல் மேம்பாட்டுக் குழுமங்களை அமைத்துப் பல செயற்றிட்டங்களை செயற்படுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.